விலை ரூபா 40
அறிமுக விலை ரூபா 20

பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 | இதழ் : 11 | வள்ளுவ ஆண்டு 2055
ஐப்பசி மாதம் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (18.10.2024)



## தொடர்ந்தும் மக்களுக்காக செயற்படுவதாக ரஞ்சன் உறுதி

### ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் பிரச்சாரங்கள் தீவிரம்

என்னை பிரபல நடிகராக மாற்றியதும், பிரபல பாடகராக மாற்றியதும் மக்கள் தான். பிரபல அரசியல்வாதியாக்கியதும் கூட இந்த மக்கள் தான். எனவே இந்த மக்கள் சார்பாக தொடர்ந்தும் நாம் செயற்படுவோம் என நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியில் களமிறங்கியுள்ள ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

02 →

## இனி வரும் தேர்தல்களிலும் கூட விமலின் கட்சி போட்டியிடாது?

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இடம்பெறவுள்ள மாகாண சபை அல்லது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடாமலிருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய சுதந்திர முன்னணி கட்சியாகவோ அல்லது கூட்டணியாகவோ போட்டியிடாது என அக்கட்சியின் தலைவர் விமல் வீரவன்ஸ விசேட அறிவிப்பொன்றை விடுத்திருந்தார்.

நாடாளுமன்ற, மாகாண சபை,

02 →



## பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு

# அனுபவமுடையவர்களை எம்.பிக்களாக்குங்கள்!



### நாட்டு மக்களிடம் ரணில் இறைஞ்சல்

**- பாலகணேஷ் டிலுக்ஷா-**

நாடு தொடர்ந்தும் சவால்களை எதிர்நோக்கி வரும் நிலையில் பொருளாதார நெருக்கடிகளை நிர்வகித்து அனுபவமுடையவர்களாக காணப்படும் கடந்த அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்தவர்களை மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வாக்காளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு மல் வீதியிலுள்ள புதிய ஜனநாயக முன்னணியின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட உரையை ஆற்றிய போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் –

02 →



## ரணில் வழியில் செல்லும் அநுர

### பதவிகளைப் பெறுமாறு பழையவர்களிடம் கெஞ்சுகின்றார்கள் என்கின்றார் காஞ்சன

**(சுப்ரமணியம் நிஷாந்தன்)**

சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் காரணமாக தேர்தல் மேடையில் கூறியதை போல் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தால் வரிகளை குறைக்க முடியாது என முன்னாள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் வழியிலேயே ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் அரசாங்கம் பயணிப்பதாகவும்,

02 →



## ஜோன்ஸ்டன் தலைமறைவா?

– கனுஷியா புஷ்பகுமார் –

சர்ச்சைக்குரிய பி.எம்.டபிள்யூ. வாகன மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தலைமறைவாகியுள்ளார்

02 →

## வரி ஏய்ப்பில் ஈடுபட்ட எட்டு நிறுவனங்கள் மீது விரைவில் சட்டம் பாயும்!

**(கனுஷியா புஷ்பகுமார்)**

பாரியளவில் வரி ஏய்ப்பில் ஈடுபட்ட எட்டு தனியார் நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தொடருவதற்கு முன்னர் இறுதிச் சந்தர்ப்பமாக ஞாபக மூட்டல்களை வழங்கியதாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஆணையாளர் சேபாலிகா சந்திரசேகர தெரிவித்தார்.

இவ்வாறு வரி ஏய்ப்பில் ஈடுபடும் இந்த நிறுவனங்களை கடந்த தினங்களில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்துக்கு அழைத்து வரிப்பணத்தை

02 →

## நாடாளுமன்றம் அனுமதித்த வரம்புக்குள்ளேயே கடன்!

### அரசு பெறுகிறது என்கின்றார் நளிந்த ஜயதிஸ்ஸ எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்கு பயிலடி

**(சுப்ரமணியம் நிஷாந்தன்)**

”நாடாளுமன்றத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ள கடன் வரம்புக்கு உட்பட்டே தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் கடன்களைப் பெறுகிறது.”

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

02 →

## இலங்கை திட்டமிடல் சேவைக்கு 43 பேர் நியமனத்திற்காக தெரிவு

### தமிழ், முஸ்லிம் எவருமில்லை!

**(முகம்மட் முக்தார்)**

இலங்கை திட்டமிடல் சேவையின் –111 ம் தரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுள் தமிழ் மொழி மூலம் தோற்றிய தமிழ், முஸ்லிம் விண்ணப்பதாரிகள் எவரும் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படவில்லை.

மேற்படி நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப்பட்டியலை அரச சேவைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இம்மாதம் 15 ம் திகதி முதல் செல்லுபடியாகும் வண்ணம் இலங்கை திட்டமிடல் சேவைக்காக 43 பேர் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்

02 →

## தேர்தல் தொடர்பில் 206 முறைப்பாடுகள் இதுவரையில் பதிவு

**(சுப்ரமணியம் நிஷாந்தன்)**

பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை 206 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த செப்டம்பர் 26ஆம் திகதி முதல் தேர்தல் சட்டங்களை மீறிய

02 →

## தொடர்ந்தும் மக்களுக்காக....



எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுக்காக ரஞ்சன் ராமநாயக்க தலைமையிலான ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியானது தற்போது தீவிர பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

மினுவங்கொடையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க, நாட்டு மக்கள் சார்பாக தொடர்ந்தும் தாம் இருக்கின்றார் எனவும் உறுதியளித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர் –

ஜனாதிபதியிடம் பல பேரின் ஆவணங்கள் உள்ளன. இன்று ஜனாதிபதியுடன் ஷானி அபேசேகர, ரவி செனவிரத்ன போன்றோர் உள்ளனர்.

திருடர்களை பிடிப்போம் என்று கூறிய தரப்பினருக்கு இன்று ஆட்சியதிகாரம் கிடைத்துள்ளது. நாம் இந்த விடயத்தில் பொறுமையாக இருப்போம். ஏனெனில், தற்போதே திருடர்கள் நடுக்கம் கண்டுள்ளார்கள். நாம் மக்களுக்கு நன்மைகளை செய்யத்தான் புதியக் கட்சியொன்றை ஸ்தாபித்துள்ளோம்.

நாம் கடந்த காலங்களிலும் மக்களின் சார்பாகத்தான் இருந்தோம். நாம் மக்களை நேசிப்பவர்கள். மக்களுக்காகத்தான் உண்மைகளை பேசினோம். அதனால்தான் சிறைச்சாலைக்கு செல்லவும் நேரிட்டது. நாம் யாருக்கும் சொத்துக்களை சேர்க்க வேண்டியத் தேவையும் கிடையாது.

மக்கள் தான் எனது உறவுகள். என்னை பிரபல நடிகராக மாற்றியதும், பிரபல பாடகராக மாற்றியதும் இந்த மக்கள் தான். அதேபோல, பிரபல அரசியல்வாதியாக்கியதும்கூட இந்த மக்கள் தான். எனவே, இந்த மக்கள் சார்பாக தொடர்ந்தும் நாம் செயற்படுவோம்” என தெரிவித்துள்ளார்.

## இனி வரும் தேர்தல்களிலும்...



உள்ளூராட்சி பிரதிநிதித்துவத்தை பெறுவதை விட அதற்கு வெளியிலிருந்து அரசியலில் ஈடுபடுவது சிறந்தது என்பதே தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரின் நிலைப்பாடாக உள்ளதாகக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய சுதந்திர முன்னணி சர்வஜன பலய கூட்டணியுடன் இணைந்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட தயாராக இருந்த நிலையில் பின்னர் அந்த தீர்மானத்தை மாற்றியிருந்தனர்.

எனினும், தேசிய சுதந்திர முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்திய காமினி வலேபொட சர்வஜன பலய கூட்டணி சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட கூட்டணியில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

அவ்வாறு போட்டியிடும் மொஹம்மட் முஸம்மில், நிமல் பியதிஸ்ஸ மற்றும் ஜகத் பிரியங்கர ஆகிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் தேசிய சுதந்திர முன்னணியுடன் இணையப்போவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ரணில் வழியில்....

எங்கள் அரசில் இருந்தவர்களை பதவிகளைப் பெற்று பணிகளைச் செய்யுமாறு கெஞ்சுகிறார்கள் எனவும் கூறியுள்ளார்.

எரிபொருள் விலையை குறைக்க முடியுமான என முன்னாள் அமைச்சர் கஞ்சன விஜேசேகரவிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தற்போதைய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் குறிப்பிடத்தக்க அதிகாரத்தைப் பெற வேண்டும். ஆட்சியில் சமநிலை இல்லாவிட்டால் மேலும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளக் கூடிய சூழல் உருவாகும்.

பொதுத் தேர்தலின் பின்னர் செய்கிறோம் அல்லது நாடாளுமன்றத்தில் சட்டத்தை நிறைவேற்றி செய்கிறோம் எனக் கூறுவது நடைமுறைக்குச் சாத்தியமான விடயங்கள் அல்ல. சில பொருள்களுக்கான வற் வரியை முழுமையாக நீக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் கோரியுள்ளனர். அவ்வாறு செய்ய வேண்டுமெனில் 18 வீதமாக உள்ள ஏனைய பொருள்களுக்கான வற் வரியை 21 வீதமாக உயர்த்த வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் 2029ஆம் ஆண்டுவரை கடனை மீளச் செலுத்த எமக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்தை நீக்கி 2024ஆம் ஆண்டிலிருந்து நாம் கடனை மீளச் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் கிடைக்கப்பெறும் வருமானங்களின் ஊடாக கடனை செலுத்த வேண்டும். கூறும் அனைத்து விடயங்களையும் எவ்வாறு செய்யப்போகிறார்கள் எனத் தெரியவில்லை.

ஆனால், ஒரு லீட்டர் எரிபொருளை இறக்குமதி செய்ய 193 ரூபாவரைத் தான் செலவாகிறது. 90 முதல் 120 ரூபாவரை வரி அறவிப்படுகிறது. இதனை நீக்கி எரிபொருளை வழங்கினால் வருமானம் இல்லாது போகும்.

இதேவேளை, அநுரகுமார திஸநாயக்கவுக்கு பாரிய மக்கள் ஆணை எதுவும் கிடைக்கவில்லை. 10 இல் 4 பேர் மாத்திரமே அவருக்கு ஆணை வழங்கியுள்ளனர். ஏனைய 6 பேர் அவருக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளனர். அதிகளவானர்கள் இம்முறை வாக்களிக்கவும் இல்லை.

கிடைக்கப்பெற்றுள்ள மக்கள் ஆணையின் ஊடாக அரசாங்கத்தின் அதிகாரத்தை கைப்பற்றும் எண்ணம் இவர்களுக்கு இல்லை.

அவ்வாறான எண்ணம் இருந்தால் முதல் இரண்டு நியமனங்களாக நிதி அமைச்சுக்கு புதிய செயலாளரை நியமித்திருப்பார்கள். இரண்டாவதாக மத்திய வங்கிக்கு புதிய ஆளுநரை நியமித்திருப்பார்கள். அதனை செய்யாது எமது அரசாங்கத்தில் இருந்த சிலருக்கு அழைப்புகளை விடுத்து பதவிகளை பெறுமாறு கெஞ்சுகின்றனர். மூன்று மாதம் இந்தப் பணியை செய்து கொடுக்குமாறு எனது நண்பர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

இவர்களிடம் இந்தப் பணியை முன்னெடுத்துச் செல்ல குழுவொன்று இல்லை. அதனால் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களின் பிரகாரம்தான் அவர்கள் நாட்டை வழிநடத்தி வருகின்றனர். அவ்வாறு செயல்பட்டால் நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல முடியும். ஆனால், அவர்களுக்கு வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்பு என்பது வேறு.”- என்றார்.

## வரி ஏய்ப்பில்....

செலுத்துமாறு ஞாபகப்படுத்திய போதிலும் அதனை புறக்கணித்தால் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

சட்டநடவடிக்கைகளுடன் தொடர்புபட்டுள்ள காரணத்தினால் அந்த நிறுவனங்களின் பெயர்களை வெளிப்படுத்த முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, 3.5 பில்லியன் ரூபா வரியை ஏய்ப்பு செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட அர்ஜுன அலோஷியஸ 'டமிருந்து குறித்த வரிப் பணத்தை நீதிமன்றத்தின் வங்கிக் கணக்கில் பெற்றுக்கொள்வதற்கான சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தினூடாக விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழக்கு தொடர்ந்தாலும் கூட செலுத்தத் தவறும் வரியை பெற்றுக்கொள்ளும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு வழங்கப்படும் நிலையில் அர்ஜுன அலோஷியஸ் செலுத்த வேண்டிய தொகை எதிர்வரும் நாள்களில் நீதிமன்ற சட்டங்களின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு வரி ஏய்ப்பு செய்துள்ளனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்கள் அந்தப் பணத்தை செலுத்துகின்றார்களா என்பது தொடர்பிலும் நாட்டு மக்கள் அவதானத்துடன் இருக்கின்றனர் என ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார நெருக்கடிகளைச்...



“மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் பொருளாதார நெருக்கடியை எவ்வாறு கையாள்வது என்பதைத் தெரிந்த தலைவர்கள் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருப்பது அவசியம்.

2027ஆம் ஆண்டுக்குள் இலங்கை தனது வெளிநாட்டுக் கடனைச் செலுத்த ஆரம்பிக்கும் போது, தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 சதவீதமாக உள்ள அரச வருமானத்தை 15 வீதமாக்கும் சவாலை புதிய அரசாங்கம் எதிர்கொள்ளும். அந்த இலக்கை எட்டுவதற்கு ஒவ்வொரு வருடமும் ஒரு வீத பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும்.

கடனை அடைக்க முடியாமல் வங்குரோத்து அடைந்து விட்டதாக அறிவித்த சந்தர்ப்பத்திலேயே நான் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றேன்.

கடன் நிலைத்தன்மையை மீட்டெடுத்தல் மற்றும் வங்குரோத்து நிலையிலிருந்து மீள தனியார் பிணைமுறியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதற்கான உடன்பாடு எட்டப்பட்டது.

இந்த நடைமுறைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டு இந்த ஆண்டு செப்டம்பர் முதல் வாரத்தில் தனியார் பிணைமுறியாளர்களிடம் அனுமதி பெறப்பட்டது. அதன்காரணமாக, தற்போது வெளிநாட்டு வங்கிகளுடன் வர்த்தகம் செய்ய முடியும் என்பதுடன் உதவிகளும் கிடைக்கும்.

இந்த ஆண்டு இறுதிக்குள், 2019 ஆம் ஆண்டில் காணப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவை மீண்டும் பெற முடியும். அதேவேளை அந்நியச் செலாவணி கையிருப்பையும் அதிகரிக்க வேண்டும். கடனை அடைப்பதற்கு மேற்கூறிய இலக்குகளை அடைய வேண்டும்.

நீங்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவராக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி அனுபவம் இல்லையென்றால் நாட்டின் இலக்குகளை அடைவதில் தோல்வியடைவீர்கள்.

அனுபவம் வாய்ந்த எங்கள் வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் எதிர்காலமானது, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தேசத்தின் மீட்சியை உறுதி செய்வதற்கும் சரியான திறன்களைக் கொண்ட தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தங்கியுள்ளது.

என்னுடன் பணியாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் புதிய ஜனநாயக முன்னணியின் கீழ் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். புதிய நாடாளுமன்றத்திற்கு அவர்களது அனுபவமும் அர்ப்பணிப்பும் அவசியமாக இருக்கும்.

கடந்த இரண்டு வருடங்களாக என்னுடன் இணைந்து செயற்பட்டவர்கள் நாட்டை முன்நோக்கி கொண்டு செல்வதற்கு மிகவும் பொருத்தமானவர்கள்.

இந்த முக்கியமான காலக்கட்டத்தில் தேசத்தை வழிநடத்தும் நிபுணத்துவம் கொண்ட வேட்பாளர்களுக்கு தமது பெறுமதியான வாக்குகளை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்” எனவும் கூறியுள்ளார்.

## ஜோன்ஸ்டன்....



குற்றப்புலனாய்வுப் பிரிவின் உள்ளகத் தகவல்கள் தெரிவிப்பதாக பிரதான சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சந்தேகநபரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவைக் கைது செய்யக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் குழுக்கள் தொடர்ந்து மூன்று நாள்களாகச் செயல்பட்டு வந்தாலும் அவர் தொடர்பில் எந்தவொரு தகவலும் இதுவரையில் கிடைக்கவில்லை.

சந்தேகநபரான முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தங்கியிருந்த வீடு மற்றும் அவர் தங்கியிருக்கும் ஏனைய இடங்கள் அனைத்திலும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வாகன உதிரி பாகங்களை இரகசியமாக இறக்குமதி செய்து அவற்றை பயன்படுத்தி பி. எம்.டபிள்யூ. கார் ஒன்றை தயாரித்துப் பயன்படுத்தினார் என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

குறித்த கார் பதிவு செய்யப்படவில்லை என்றும், அது போலி எண் மூலம் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளத

இந்தக் கார் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் வாகன தரிப்பிடத்தில் பல நாள்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இரகசிய பொலிஸார் மூலம் கைப்பற்றப்பட்டது.

“டாக்சி அபே“ எனப்படும் காமினி அபேரத்ன ஹில்டன் ஹோட்டலுக்கு முன்பாக, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு சொந்தமானது என சந்தேகிக்கப்படும் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட காரை கைவிட்டுச் சென்றுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காரில் இருந்து ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு சொந்தமான ஆவணங்களும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஹில்டன் ஹோட்டலின் வாகனம் நிறுத்துமிடத்தில், “டபிள்யூபி சி 24-0430“ என்ற எண் கொண்ட கறுப்பு நிற பி. எம்.டபிள்யூ. கார் சந்தேகத்திற்கிடமான முறையில் தரித்து நிற்பதாகக் கிடைத்த தகவலின்படி, கடந்த 10ஆம் திகதி முதல் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போது விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகளின் பணிப்பாளராக பணியாற்றிய காமினி அபேரத்ன, ஹில்டன் ஹோட்டலில் சில காலமாக தங்கியிருந்ததார் எனவும், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும் இந்த கார் ஹோட்டலின் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் ஹோட்டல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் காமினி அபேரத்ன வாக்குமூலம் வழங்கவுள்ளார் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு வாக்குமூலம் வழங்க வருமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்த போதிலும், சுகயீனமுற்றிருப்பதால் பின்னர் வந்து வாக்குமூலம் வழங்குவதாக முன்னாள் அமைச்சர் உறுதியளித்திருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சருக்கு எதிரான பயணத்தடையை பெற்றுக்கொள்ளவும் குற்றப்புலனாய்வு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறான பின்னணியிலேயே, தற்போது முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தலைமறைவாகியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## நாடாளுமன்றம்....

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் கடந்த 13 நாள்களில் 419 பில்லியன் ரூபாவை கடனாக பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

இதுகுறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன நேற்றுமுன்தினம் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு கண்டனம் வெளியிட்டிருந்தார்.

ஒரு நாளைக்கு 32.23 பில்லியன் ரூபா வீதம் இவ்வாறு அரசாங்கம் கடன்களை பெற்று வருவதாக ரோஹினி கவிரத்ன, குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த நிலையில், அரசாங்கத்தின் மீது முன்வைக்கப்படும் இந்த குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளித்துள்ள நலிந்த ஜயதிஸ்ஸ –

சமூக வலைத்தளங்களில் மாத்திரமல்ல, நாட்டை ஆட்சி செய்தவர்களும் எமது அரசாங்கம் கடன் பெறுவதாக குற்றம் சுமத்துகின்றனர். கடன் வாங்காத ஒரு நாட்டை கையளித்திருந்தால் நாம் கடன்களை பெற வேண்டிய அவசியமில்லை.

கடன்களில் மூழ்கிய ஒரு நாட்டையே நாம் பொறுப்பேற்றுள்ளோம். பாரிய அளவில் கடன்களை பெற்று நாட்டை மிகவும் நெருக்கடியான பொருளாதார சூழ்நிலைக்குள் தள்ளியுள்ளனர். வருமானத்தை ஈட்டுவதற்கான எந்தவொரும் வழிமுறையையும் இவர்கள் உருவாக்கியிருக்கவில்லை. அதிலிருந்து நாம் மீண்டெழ வேண்டும்.

கடன்களை பெற்றே தற்போது சமநிலையை ஏற்படுத்த வேண்டியுள்ளது. ஆனால், கடன்களை பெறாத நாட்டை எவ்வாறு உருவாக்குவதென நாம் செய்துக்காட்டுகிறோம். அதற்கான அனைவரும் பொறுமையுடன் இருக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் கடன் பெற வேண்டிய வரம்பொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கு உட்பட்டுதான் நாம் கடன்களை பெறுகிறோம். அதற்கு அப்பால் செல்ல மாட்டோம். குறித்த கடன்களின் ஊடாக பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்து வருகிறோம். கையளித்த இடத்திலிருந்துதான் பணியை தொடங்கியுள்ளோம்.” – என்றார்.

## இலங்கை திட்டமிடல்....

பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.இவர்கள் அனைவரும் சிங்கள மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றிய சிங்கள அலுவலர்களாவர்.

நியமனம் வழங்குவதற்காக தமிழ், சிங்கள மொழி மூலம் போட்டிப் பரீட்சையினை நடாத்தியபின் நியமனத்திற்காக தமிழ் மொழி மூலத்தைக் கவனத்தில் கொள்ளாது பெரும்பான்மை சிங்கள மொழியை மட்டும் கவனத்திற்கொள்வது விண்ணப்பதாரிகளின் அடிப்படை மொழி உரிமையினை மீறும் பாரிய அநீதியாகும் என மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு அரச நியமனங்களுக்காக தமிழ், சிங்கள மொழி மூலமாக பரீட்சைகளை நடாத்திய பின் ஒருமொழியை மாத்திரம் கவனத்திற்கொள்ளும் போக்கு அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.இதனை தட்டிக் கேட்பதற்கு தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் முன்வராமை காரணமாகவே இவ்வநீதி தொடர்கின்றது எனவும் சுட்டி காட்டப்படுகிறது

## தேர்தல் தொடர்பில்....

இவ்வாறு பதிவாகியுள்ளன எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஆனால், இதுவரை எந்தவொரு வன்முறையும் பதிவாகவில்லை. கிடைக்கப்பெற்ற 206 முறைப்பாடுகளில் 130 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, விருப்பு இலக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளதால், விருப்பு வாக்குச் சண்டையை உருவாக்காமல் தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுப்பது அனைத்து தரப்பினரின் பொறுப்பாகும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

வன்முறைகளற்ற நியாயமான தேர்தலை நடத்துவதற்கு அனைத்துக் கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் ஆதரவாளர்களும், பொது மக்களும் ஒத்துழைப்புகளை வழங்குவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 | editorial@oruvan.com

## அரசுக்கு ஏன் இந்த தடுமாற்றம்...?

உண்மையை வெளிப்படுத்துவதில் திக்கு முக்காடும் நிலை இந்த அரசிலும் தொடர்கிறது.

தவறிழைத்தோரையும் சூத்திரதாரிகளையும் அடையாளப்படுத்துவதில் முன்னைய அரசுகளின் போக்கையே புதிய அரசும் பின்பற்றுகி என்பது தெரிகிறது.

பதவிக்கு வந்ததும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான உண்மைகளை வெளிக்கொணர்வோம் என்று மேடைக்கு மேடை உறுதிமொழிகளை வழங்கி வந்தவர் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க. ஜனாதிபதி சார்ந்த தேசிய மக்கள் சக்தி, அவரது தாய் இயக்கமான ஜே.வி.பி. ஆகியவை உண்மையை வெளிப்படுத்துவோம் என்று உறுதி உரைத்தார்கள்.

ஜனாதிபதி ஆட்சி அமைத்து கிட்டத்தட்ட ஒரு மாதம் பூர்த்தி அடைகிறது. இந்த விடயத்தில் எதுவும் நடந்ததாக தெரியவில்லை.

பதவியேற்றதன் பின்பு, தாக்குதலினால் கடுமையாக பாதிக்கப்பட்ட கட்டுவாப்பிட்டிய தேவாலயத்துக்கு சென்ற ஜனாதிபதி, அங்கு கூடியிருந்த கிறிஸ்தவ மக்கள் மத்தியிலேயே அதே உறுதி மொழியைத்தான் வழங்கினார்.

உண்மையைக் கண்டறியும் இந்த அரசாங்கத்தின் முன்னெடுப்புக்கள் வேறொரு திசையை நோக்கி இப்போது பயணிப்பவை போல தெரிகிறது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து, விசாரணை நடத்துவதற்காக கடந்த அரசாங்கங்களால் நியமிக்கப்பட்ட இரண்டு ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் ஏற்கனவே தனித்தனியாக வெளியிடப்பட்டன. உண்மை அறிக்கைகள் ஒரு புறம் இருக்க, ஆட்சியிலிருந்த கோட்டாபய ராஜபக்ஷ அரசு, சுத்து மாத்துக்கள் செய்து, அறிக்கைகளில் ஒரு பகுதியை வெளியிட்டிருந்தது. ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருந்த இரண்டு தனி தனி அறிக்கைகளிலும் சில பக்கங்கள் நீக்கப்பட்டன என அந்த அரசு மீது அரசியல் கட்சிகள் குற்றம் சாட்டியிருந்தன.

ஆட்சியிலிருந்த முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, அவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ், ரணில் விக்கிரமசிங்க ஆகியோர், முழுமையான அறிக்கையை கண்டறிந்து வெளிப்படுத்துவதில் கவனம் செலுத்தவில்லை. தென்படும் மர்ம முடிச்சுகள் அறிக்கைகளை முழுமையாக வெளியிட்டால் பல அரசியல் தலைமைகளுக்கும் பாதகமாக அமையும் என்ற பயம்தான் இதற்குக் காரணமாகும்.

இந்த இழுபறிக்கு மத்தியில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கமன்பில்ல, தெரிவித்த கருத்து ஒன்று பூதாகரமாக வெடித்து இருக்கிறது. இரு ஆணைக் குழுக்களின் முழுமையான அறிக்கைகள் தன்னிடம் இருக்கின்றன என அவர் கூறுகிறார். விசாரணைகளைத் துரிதப்படுத்துவதாக காட்டிக் கொள்ளும் அரசாங்கம், அவரிடம் இருக்கும் அறிக்கைகளை அரசிடம் ஒப்படைக்குமாறு காலக்கெடு கொடுத்தது. கொடுக்க முடியாது என்று அடம் பிடிக்கும் உதய கமன்பில, அதனைப் பகிரங்கப்படுத்த போவதாகக் கூறுகிறார்.

ஜனாதிபதி அநுர குமார திஸ நாயக்க அரசுக்கு இது ஒரு சங்கட நிலை. தன்மான பிரச்சினை. வெளிப்படுத்தப்படாமல் முழுமையான இரண்டு அறிக்கைகளை உதய கமன்பில வைத்திருப்பது சட்டவிரோதமானது என்று ஜனாதிபதி தரப்புக் கருதுகிறது.

இதற்காக தம்மைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக உள்ளக வட்டாரங்களை ஆதாரம் காட்டி உதய கம்மன்பிலவே கூறுகிறார்.

யார் குற்றினாலும் அரிசியாக வேண்டும். இதுதான் இன்று நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு. தன்னிடம் உள்ள அறிக்கை ஆதாரத்தை வெளியிட முனைபவரை, அச்சுறுத்துவதும் அதட்டுவதும் ஏற்புடையதல்ல. அவரிடம் உள்ள அறிக்கையை பறித்தெடுத்து, அரசு தாங்கள் நடத்தும் விசாரணைக்கு ஆதாரமாக கொள்வது எந்த வகையில் யதார்த்தமாக அமையும்...?

இரண்டு ஆணை குழுக்களாலும் வெளி யிடப்பட்ட அறிக்கைகளில் உண்மைத் தன்மை இல்லை என்றே ஜே.வி.பி. - தேசிய மக்கள் கோஷ மாக முன் வைத்தார்கள். ஆட்சியைப் பிடித்ததும் புதிதாக விசாரணை ஆரம்பிப்போம் என்பதுதான் இவர்களுடைய அறிவிப்பு. அப்படி இருந்தும், இப்போது ஏன் தடுமாறுகிறார்கள்...?

நல்லாட்சி அரசாங்கத்தைத் துரத்திவிட்டு, ஆட்சியைப் பிடிப்பதற்காகவே, கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டிருக்கிறது என்று ஜே.வி. பி. அப்போது அடித்துக் கூறியே வந்தது. கோட்டாபய ராஜபக்ஷ வைப் பதவிக்கு கொண்டு வருவதற்கு அரச புலனாய்வு பிரிவோடு சேர்ந்து, தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டப்பட்டது.

அரசாங்கப் புலனாய்வு பிரிவு (SIS) தலைவராக இருந்த மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே என்பவரின் ஏற்பாட்டுடன் தேசிய தவ்ஹீத் ஜமாத் என்ற அமைப்பே இந்த தாக்குதலை நடத்தியதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

என்றாலும், மொட்டுக் கட்சி கோலோச்சிய ஆட்சிக்காலத்தில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்த சரத் வீரசேகர விடுத்த அறிவிப்பும் அதிர்ச்சியைக் கொடுத்தது. தாக்குதல் சூத்திரதாரி அடையாளம் காணப்பட்டுள்ளதாக அப்போது நாடாளுமன்றத்திலே பகிரங்கமாக அறிவித்தார். சிறையில் இருக்கின்ற மௌலவி ஒருவரின் பெயரையும் அதில் குறிப்பிட்டார்.

மக்களின் எதிர்ப்பலைகளைச் சமாளிக்க முடியாமல் அந்த அறிவிப்பை விடுத்தனர் என ஜே.வி.பி. மற்றும் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் நிராகரித்தன.

ஆதாரங்கள் முழுமையாக திரட்டப்படாத விசாரணைகளால் உண்மையைக் கண்டறிய முடியாத நிலையில், அறுதிப் பெரும்பான்மையோடு இருந்த கோட்டாபய அரசாங்கம் தடுமாறியதைக் காண முடிந்தது.

ஆதாரங்கள் திட்டமிட்டு மறைக்கப்பட்டதனால் இந்தத் தடுமாற்றம் ஏற்பட்டதாகவே அரசியல் கட்சிகள் பகிரங்கமாகத் தெரிவித்தன.

ஆகவே, பதவிக்கு வந்ததும் உண்மையை கண்டறிவோம் என்று அடித்துச் சொல்லி வந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம், இனியும் மழுப்பல் போக்கில் செயல்பட முடியாது.

பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்கள் கொதித்துக் கொந்தளிக்கிறார்கள்.

கள நிலைவரம் ஆட்சியாளர்களுக்கு சாதகமாகவே இருக்கிறது. இந்த நிலையில், முழுமையான புதுப்புது ஆதாரங்களை திரட்டி உண்மையை கண்டறியுங்கள். தாமதங்கள் வீணான அரசியல் குளறுபடிகளுக்கு வழி வகுக்கலாம்.

## ரஞ்சனுடன் இணைந்து அரசியல் செய்வதில் பெருமை என்கிறார் கிரிக்கெட் வீரர் டில்ஷான்

ரஞ்சன் ராமநாயக்க போன்ற ஒரு நல்ல தலைவருடன் இணைந்து அரசியலில் ஈடுபடுவதை எண்ணி பெருமையடைகின்றார் என்ச் முன்னாள் கிரிக்கெட் வீரரும் ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் களுத்துறை வேட்பாளருமான திலகரத்ன டில்ஷான் தெரிவித்துள்ளார்.

நான் விளையாட்டுப் போட்டிகளில் சம்பாதித்துவிட்டேன். எனவே அரசியலில் சம்பாதிக்க வேண்டியத் தேவை எனக்குக் கிடையாது எனவும் அவர் கூறியுள்ளார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் –

“இப்போது புதிய ஜனாதிபதியொருவர் தெரிவாகியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம்,



வாகன அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட சலுகைகளை நிறுத்தியுள்ளார்.

நான் விளையாட்டுப் போட்டிகளில் சம்பாதித்துவிட்டேன். எனவே அரசியலில் சம்பாதிக்க வேண்டியத் தேவை எனக்குக் கிடையாது , உண்மையைக் கூறவேண்டுமெனில், பல விடயங்களை கை விட்டுதான் அரசியலில் நாம் இறங்கியுள்ளோம்.

ஐக்கிய ஜனநாயகக் குரல் எனும் புதிய கட்சி ஊடாக நான் அரசியலுக்கு வந்தமையை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

இது தூய்மையானதொரு கட்சியாகும். ஏனையக் கட்சிகளின் ஊடாக அரசியலுக்குள் நான் வந்திருந்தால், மோசடியாளர்களுடன் இணைந்து வேலை செய்ய வேண்டியேற்பட்டிருக்கும்.

எமது கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க, ஊழல்– மோசடிகளுக்கு எதிராக தொடர்ந்தும் குரல் கொடுத்த ஒரு நபராவார். இப்படியான ஒரு தலைவருடன் இணைந்து அரசியல் செய்வதை எண்ணி நான் பெருமையடைகிறேன்” என திலகரத்ன டில்ஷான் தெரிவித்துள்ளார்.

## எல்பிட்டிய பிரேதேச சபை தேர்தல் - எந்த விரலில் மையிடுவது....?

### ஆணைக் குழு விளக்கம்



- எஸ்.டொரின் -

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் எதிர்வரும் 26ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், வாக்காளரை பதிவு செய்தல் மற்றும் குறியீட்டினால் அடையாளமிடல் தொடர்பாக விபரம் வெளியாகியுள்ளது.

இதனடிப்படையில், வாக்காளரின் இடது கையின் சிறு விரலில் கடந்த தேர்தலில் குறியீடு இடப்பட்டிருப்பதனால்,எல்பிட்டிய தேர்தல் தினத்தன்று, உள்ளூர் அதிகார சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வாக்காளரை குறியீட்டினால் அடையாளமிடுதல் தொடர்பில் எழக்கூடிய சிக்கலை தீர்க்கும் பொருட்டு வாக்காளரின் இடது கையின் பெருவிரலில் அடையாளமிடுவதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வாக்காளரின் இடது கையில் பெருவிரல் இல்லாதபோது அவரது வலது கையின் பெருவிரல் அல்லது வேறொரு விரலில் அடையாளமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதென தேர்தல்கள் ஆனையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தடுப்பூசி பெற்றுக்கொண்ட ஐந்து மாணவிகள் சுகவீனத்துடன் வைத்தியசாலையில் அனுமதி

- எஸ்.டொரின் -

களுத்துறை – அங்குருவத்தோட்ட பகுதியில் தடுப்பூசி பெற்றுக்கொண்ட 5 பாடசாலை மாணவர்கள் நேற்று திடீர் சுகயீனமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதற்காக வழங்கப்படும் HPV தடுப்பூசியை பாடசாலையில் செலுத்தியதைத் தொடர்ந்து 12 வயதுடைய ஐந்து பாடசாலை மாணவிகள் தலைவலி, வயிற்று வலி மற்றும் மயக்கம் உள்ளிட்ட அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அங்குருவத்தோட்ட வெனிவெல் பிட்டிய கனிஷ்ட கல்லூரியின் ஏழாம் தரத்தில் கல்வி பயிலும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் தடுப்பூசியைப் பெற்ற சிறிது நேரத்திலேயே சுகவீனமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



மில்லேனிய பிரதேச சுகாதார பிரிவினர் குறித்த பாடசாலையில் 26 மாணவிகளுக்கு தடுப்பூசி செலுத்தினர். ஆனால் அவர்களில் ஐந்து பேருக்கு விரைவில் தலைவலி, வயிற்று வலி மற்றும் மயக்கம் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டன.

நோய்வாய்ப்பட்ட மாணவர்கள் ஆரம்பத்தில் மில்லனியா ஆமுஉ அலுவலகத்தின் அதிகாரிகளால் ஹல்தோட்டை பிராந்திய மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதையடுத்து, மேலதிக சிகிச்சைக்காக ஹொரணை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தற்போது மாணவர்கள் வார்டு எண் 6ல் சிகிச்சை பெற்று வருகின்றனர், அவர்களின் உடல்நிலை சீராக இருப்பதாகவும் மருத்துவமனை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

ஐந்து சிறுமிகளும் வெனிவெல் பிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் அங்குருவத்தோட்ட பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போர்க்களமான வன்னியில் இரு மனித புதைகுழிகள்

## நீதிமன்ற உத்தரவுடன் விசாரணைகள் அடுத்த கட்டத்திற்கு

- பாத்திபன் -

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனித புதைகுழி உள்ளிட்ட போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மண்ணில் காணப்பட்ட இரண்டு புதைகுழிகள் தொடர்பான அடுத்தகட்ட விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நீதிமன்ற அனுமதி கிடைத்துள்ளது.

11 வருடங்களுக்கு முன்னர் மன்னாரில் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியின் மாதிரிகளை வெளிநாட்டு ஆய்வகத்திற்கு அனுப்புவதற்கும், சதொச மனித புதைகுழியில் ஆறு வருடங்களுக்கு முன்னர் அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புகளை தடயவியல் மானுடவியல் பரிசோதனைக்கு பொருத்தமான மற்றொரு இடத்தில் சேமித்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் நீதிமன்றம் நேற்று முன்தினம் (ஒக்டோபர் 16) அனுமதி வழங்கியுள்ளது.

திருக்கேதீஸ்வரம் மற்றும் சதொச மனித புதைகுழிகள் குறித்த வழக்குகளிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி சாந்திப்பிரகாசம் நிரஞ்சன், வழக்கு விசாரணைகளின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி இந்தத் தகவலை வெளியிட்டார்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் இருந்து 2013ஆம் ஆண்டு அகழ்ந்து எடுக்கப்பட்ட 82 சடலங்களின் கார்பன் ஆய்வுக்கு தேவையான மாதிரிகளை புளோரிடாவில் அமைந்துள்ள மானுடவியல் நிறுவனத்திற்கு அனுப்புவதற்கான நடைமுறைகளை ஆரம்பிப்பதற்கு சட்ட வைத்திய அதிகாரி தனஞ்சய வைத்தியரத்ன நீதிமன்றத்திடம் அனுமதி பெற்றதாக சட்டத்தரணி குறிப்பிடுகின்றார்.

”ஏற்கனவே மனித எச்சங்களில் இருந்து பகுப்பாய்விற்காக பிரித்து எடுக்கப்பட்ட மாதிரிகள் நீதிமன்ற காவலில் இருக்கின்றன. அவற்றை சீ-14 பரிசோதனைக்காக புளொரிடா மானுடவியல் ஆய்வகத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் இன்று வைத்தியரினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது தொடர்பான நடவக்கைகள் மேற்கொள்ள நீதிமன்றத்தினால் கட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.”

சட்ட வைத்திய அதிகாரி சுனில் ஹேவகே, திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகள் தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கவிருந்த போதிலும், அவர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லையென, சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்தார்.

“இந்த அறிக்கையை எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி தாக்கல் செய்வதாக தவணையிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் குறித்த அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்படும். அத்தோடு குறித்த மாதிரிகள் சீ-14 பரிசோதனைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடர்பான விவரங்கள் குறித்தும் அன்றைய தினம் அறிவிக்கப்படும்.”



மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் மன்னார் நீதிவான் நீதிமன்றில் டிசம்பர் மாதம் 20ஆம் திகதி மன்னார் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்ற

### சதொச புதைகுழி மீண்டும் அகழ்வு செய்யப்பட வேண்டுமோ?

உத்தரவுக்கமைய மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் 82 மனித உடல்களின் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆறு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனித புதைகுழி அகழ்வு தொடர்பில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள விசாரணை அறிக்கையை தயாரிக்கும் ஆரம்பகட்ட பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

மன்னார் சதொச மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் பொருள்களைப் பிரித்தெடுக்கும் நடவடிக்கை கடந்த வாரம் ஐந்து நாள்களாக மன்னார் நீதிவான் முன்னிலையில் இடம்பெற்றன என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி சாந்திப்பிரகாசம் நிரஞ்சன் தெரிவிக்கின்றார்.

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்லியல் துறையின் முதுகலைப் பிரிவின் பேராசிரியர் ராஜ் சோமதேவ சதொச மனித புதைகுழியை சுற்றி மாதிரிகளைப் பெறுவதற்காக அகழ்வு செய்வித்தார் என சட்டத்தரணி சாந்திப்பிரகாசம் நிரஞ்சன், குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

“ராஜ் சோமதேவ அவர்களினால் சதொச மனித புதை குழியை சுற்றி நான்கு இடங்களில் பரீட்சார்த்தமாக தோண்டிப் பார்த்து 110 சென்றிமீட்டர் மற்றும் 130 சென்றிமீட்டர் அளவில் கடந்த 8ஆம் திகதி ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.”

தடயவியல் மானுடவியல் பரிசோதனைக்கு உரிய மாதிரிகளை வைப்பதற்கு தற்போது உள்ள இடம் போதுமானதாக இல்லை என, சட்ட வைத்திய அதிகாரி சுனில் ஹெவகே சார்பில், சட்ட மா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான சடடத்தரணிகளால் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது.

இந்த மாதிரிகளை வேறு பொருத்தமான இடத்தில் சேமித்து வைக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாக சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவிக்கின்றார்.

“வைத்தியர் ஹேவகேயினால் பகுப்பாய்வு செய்யப்பட இருக்கின்ற மனித எச்சங்கள், அதாவது இறப்புக்கான காரணம், ஆண், பெண், வயதெல்லை போன்ற விடயங்கள் சம்ப்ச்ந்தமான ஆய்வு செய்வதற்கு கழசநளெைஉ யவொசழிழடழபல (துடயவியல் மானுடவியல்) ஆய்வினை செய்வதற்கு இட வசதிகள் போதையால் நீதிமன்றத்தில் இருந்து ஒரு கட்டளை ஒன்றை பிறப்பிக்குமாறு கோரப்பட்டது. அதற்கான கட்டளை நீதி மன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது.”

2018 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகளின் போது அடையாளம் காணப்பட்ட மன்னார் சதொச மனிதப் புதைகுழியில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது 28 சிறுவர்கள் உட்பட 376 மனித உடல் உறுப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.

குற்றம் இடம்பெற்ற இடமாக கருதப்பட்டு மன்னார் சதொச மனிதப் புதைகுழி தோண்டப்பட்டு வருவதாக சட்ட வைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ஷ 190ஆவது நாள் அகழ்வு விசாரணையின்போது ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

மன்னார் சதொச புதைகுழியில் இருந்து தோண்டியெடுக்கப்பட்ட ஆறு எலும்புகளை ஆய்வு செய்த அமெரிக்காவின் மியாமியை தளமாகக் கொண்ட பீட்டா அனலிட்டிக்ஸ் நிறுவனம் (Beta Analytic Inc.) அவை கி.பி.1404 -1635ற்கும் இடைப்பட்ட நூற்றாண்டுகளை சேர்ந்தது எனத் தீர்மானித்தது.

ஜூலை 2019 இல், அந்த தீர்மானத்தை கடுமையாக நிராகரித்த களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்லியல் முதுகலைப் பிரிவின் பேராசிரியர் ராஜ் சோமதேவ, வெகுஜன புதைகுழியின் காலத்தைப் பற்றிய நம்பகமான தீர்மானத்திற்கு வரக்கூடிய வகையில், ஜூலை 2019 இல், மனித எலும்புகளுடன் தோண்டியெடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பொருள்களில் புதிய விசாரணைகளை ஆரம்பித்தார்.

அப்போது கண்டெடுக்கப்பட்ட எலும்புகளில் சிலவற்றில் ஆழமான வெட்டுக்காயங்கள் காணப்பட்டமையுடன், ஒன்றாகக் கட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் எலும்புத் துண்டுகளும் மனித புதைகுழியில் காணப்பட்டன.



சதொச மனித புதைகுழி மீண்டும் தோண்டப்பட வேண்டுமா? பாதுகாக்கப்பட வேண்டுமா? என்பது குறித்து அடுத்த வழக்கு விசாரணைக்கு முன்னதாக அறிக்கை அளிக்குமாறு பேராசிரியர் ராஜ் சோமதேவ மற்றும் சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ச ஆகியோரிடம் நீதிமன்றம் கேட்டுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி சாந்திப்பிரகாசம் நிரஞ்சன் தெரிவிக்கின்றார்.

“அத்தோடு ராஜ் சோமதேவவிடமும் எடுக்கப்பட்ட பிற பொருள்களில் இருந்து அதற்கான காலப்பகுதி என்னவாக இருக்கும் என்ற அறிக்கையையும் சமர்ப்பிக்கக் கோரப்பட்டுள்ளது. அத்தோடு மேலதிகமாக சதொச மனித புதைகுழியை மீண்டும் அகழ்வு செய்ய வேண்டுமா? அல்லது அதனை பாதுகாக்க வேண்டுமா என்பது தொடர்பான அபிப்பிராயங்களை பேராசிரியர் ராஜ் சோமதேவ அவர்களாலும் சட்ட வைத்தியர் ராஜபக்ஷ் அவர்களினாலும் அறிக்கை ஒன்றை எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. அத்தோடு,குறித்த பொருள்கள் உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு கட்டளை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.”

# பெருந்தோட்ட மக்களை மலையக அரசியல் காலம் காலமாக ஏமாற்றியே வந்திருக்கின்றது

## ஐக்கிய மக்கள் குரலின் வேட்பாளர் பிரதீபன் சாடல்

பழைய தலைமைகளான திகாம்பரமும் ஆறுமுகன் தொண்டமான் வழிவந்த ஜீவன் தொண்டமானும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் பெற்றுக்கொடுப்பார்கள் எனத் தெரிவித்து பல முறை ஏமாற்றி வந்துள்ளனர் என ஐக்கிய மக்கள் குரல் கட்சியின் வேட்பாளர் பெரியசாமி பிரதீபன் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஹட்டனில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் -

“மலையகத்தில் உள்ள அரசியல் மற்றும் தொழிற்சங்க தலைமைகள் காலம் காலமாக பெருந்தோட்ட மக்களை ஏமாற்றி வந்துள்ளனர்.

திகாம்பரம், நல்லாட்சி காலத்தில் தோட்டத்தொழிலாளர்களுக்கு 1000 ரூபா பெற்றுத்தருவதாக அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தலவாக்கலைக்கு கூட்டிக்கொண்டு வந்து தெரிவித்தார். ஆனால் சம்பளம் பெற்றுத்தரப்படவில்லை.

பல உயிர் தியாகங்களையும் போராட்டங்களையும் செய்துதான் காலம் கடந்து ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்பட்டது. அது சில தோட்டங்களில் முறையாக வழங்கப்படவில்லை.

இந்நிலையில், ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின் அவரை அதே தலவாக்கலைக்கு ஜீவன் தொண்டமான் கூட்டி கொண்டு வந்து 1700 ரூபா தருவதாக தெரிவித்தார். வர்த்தமானியும் வெளியிடப்பட்டது.

ஆனால், சம்பளம் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இந்த நிலையினை மாற்றவே ரஞ்சன் ராமநாயக்க தலைமையிலான ஐக்கிய மக்கள் குரல் முதல் முறையாக நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடவுள்ளது .” என ஐக்கிய மக்கள் குரல் கட்சியின் வேட்பாளர் பெரியசாமி பிரதீபன் தெரிவித்துள்ளார்.

# வேட்பு மனுக்களுடன் சொத்து விவர ஆவணங்களையும் ஏற்கும் நிலை : அதிகாரிகளுக்கு அசௌகரியம்!

கனுஷியா புஷ்பகுமார்




நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்களின் வேட்புமனுக்களுடன் சொத்துப் பொறுப்புக்கள் பற்றிய ஆவணங்களையும் ஒரே தடவையில் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் தேர்தல் அதிகாரிகள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் பல சுயேச்சைக் குழுக்களில் இருந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள ஆயிரக்கணக்கான வேட்பாளர்களின் சொத்து பொறுப்புக்கள் பற்றிய ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளமை அதற்கான காரணம் எனத் தேர்தல் கடமைகளில் நியமிக்கப்பட்டுள்ள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டு இல.9 ஊழல் மோசடி எதிர்ப்பு சட்டத்தின்படி, தேர்தல் இடம்பெறும். இவ்வாறு அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து வேட்பாளர்கள் தமது சொத்துப் பொறுப்புக்களை முன்னிலைப்படுத்துவது கட்டாயம் என்பதோடு வேட்புமனுக்களுடன் தேர்தல் அதிகாரிகளிடம் அவற்றை ஒப்படைக்கவும் வேண்டும்.

சட்டத்தின்படி, தேசியப் பட்டியலின் மூலம் போட்டியிடும் வேட்பாளர்களும் வேட்புமனுக்களுடன் சொத்து பொறுப்புக்கள் தொடர்பிலான அறிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

இவ்வாறு ஒப்படைக்கப்படும் போது சொத்துப் பொறுப்புக்களுடன் அதிகளவிலான கடதாசிகள், ஆவணங்களைப் பொறுப்பேற்கும் போது, அதிகாரிகள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றமை குறித்த உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

குறைந்தது வேட்புமனுக்களை வழங்கி ஒரு வாரத்திற்குள் சொத்துப் பொறுப்புக்களை வழங்க சந்தர்ப்பம் வழங்கப்படின் இவ்வாறான ஒரு நிலை ஏற்படாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

சட்டத்தில் உள்ளவாறு சொத்துப் பொறுப்புக்களை பொறுப்பேற்க வேண்டியிருந்தாலும் நடைமுறையில் அது கடினமான விடயம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நடைமுறை தொடர்பில் சிந்திக்காது செயற்படுவது இதற்கான முக்கிய காரணம் என தெரிவித்த அவர், இதனால் அதிகாரிகள் மட்டுமன்றி வேட்பாளர்களும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என அவர் தெரிவித்தார்.

வேட்புமனுவுடன் சொத்து பொறுப்புக்களை வழங்கத் தவறுகின்றமை தண்டனைக்குரிய குற்றம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

# ஓய்வூதியதாரர்களின் கணக்குகளில் மூவாயிரம் ரூபா கொடுப்பனவு வைப்பீடு

## தபால் நிலையங்கள் ஊடான கொடுப்பனவு 18 ஆம் திகதி முதல் பெறலாம்

அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் நேற்று முன்தினம் (16 ஆம் திகதி முதல் ரூ.3,000 மாதாந்த இடைக்கால கொடுப்பனவு வழங்க ஓய்வூதியத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

ஓய்வூதியதாரர்களுக்கான உத்தேச மாதாந்த இடைக்கால கொடுப்பனவான 3,000 ரூபா வழங்கப்படாமை தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அதற்கான பணத்தை திறைசேரியிலிருந்து வழங்குமாறு அண்மையில் பணிப்புரை விடுத்தார். அந்த அறிவுறுத்தலின்படி, திறைசேரியிலிருந்து தேவையான பணம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதோடு, அதனை நேற்று முன்தினம் முதல் ஓய்வூதியதாரர்களின் கணக்கில் வைப்பிலிட ஓய்வூதிய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக ரூ.3000 வழங்க 24.08.2024 திகதியிட்ட 02 / 2024 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போதிலும், அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, 679,960 ஓய்வூதியதாரர்களுக்கு இந்த மாதத்திற்கான 2,021 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம், ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது. அதன்படி, இந்தக் கொடுப்பனவை நேற்று முன்தினம் முதல் வழங்க ஓய்வூதியத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் ஏற்பாடு செய்திருந்தது. அரச மற்றும் தனியார் வங்கிகளில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களின் வங்கிக் கணக்கில் நேற்றுப்பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.இதனை தபால் நிலையங்கள் மற்றும் உப அலுவலகங்களில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் இந்தக் கொடுப்பனவை இன்று முதல் பெற்றுக்கொள்ள முடியும்.

# ஆறு உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் அறுவர் சூரியவெவ பகுதியில் கைது

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 06 துப்பாக்கிகளுடன் 6 பேர் கொண்ட குழுவொன்றை பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படை சூரியவெவ முகாமின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய ஹம்பாந்தோட்டை பிராந்தியத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அதிகாரிகள் குழுவொன்று சூரியவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வல்சபுகல பகுதியில் சுற்றிவளைப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

சூரியவெவ பிரதேசத்தில் வசிக்கும் 28, 29, 34, 39 மற்றும் 47 வயதுடைய 6 பேரை கைதுசெய்துள்ளனர்.

குறித்த குழுவினரை மேலதிக விசாரணைகளுக்காக சூரியவெவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



# சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 108 வாகனங்களைக் காணவில்லை!

-கனுஷியா புஷ்பகுமார்-

இலங்கை சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான 108 வாகனங்கள் தற்போது அங்கு இல்லை என தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் வெளிவந்துள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 128 வாகனங்கள் காணப்படும் நிலையில், அதில் 108 வாகனங்கள் தொடர்பில் எதுவித ஆதாரங்களும், விவரங்களும் தணிக்கை அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இதேவேளை, சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் போக்குவரத்து மற்றும் கணக்குப் பிரிவு ஆகியவற்றில் உள்ள 444 வாகனங்களில் 82 வாகனங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவில்லை.

அவ்வாறு பதிவு செய்யப்படாத வாகனங்களின் மதிப்பு 140,135,000 ரூபாய் ஆகும்.

சிவில் பாதுகாப்பு திணைக்களம் தொடர்பாக 2023 ஆம் ஆண்டுக்கான செயல்திறன் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தணிக்கை அறிக்கையில் இந்தத் தகவல் உள்ளடக்கப்பட்டுள்ளமை

# கொழும்பில் பிரசாரத்தை ஆரம்பித்தது ஈ.பி.டி.பி.!

கொழும்பு மாநகரில் ஈ.பி.டி.பி கட்சியின் முதன்மை வேட்பாளரான மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ராஜேந்திரன் தனது தேர்தல் பிரசாரத்தினை நேற்று கொழும்பில் ஆரம்பித்தார்.

பிரசாரத்தை ஆரம்பித்த அவர், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார். ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில் பிரதம குரு ஜெயந்தன் குழுக்களிடம் கையளித்து வைத்தபோது கொழும்பு செட்டியார் தெருவில் பொது மக்களுக்கு பிரசாரத் துண்டுப் பிரசுரங்களை கையளிப்பதையும் அருகில் ஈ.பி.டி.பி யின் தேசியப் பட்டியலிற்கு தெரிவு செய்யப்பட்ட பாபு சர்மா மற்றும் முக்கிய பிரமுகர்களையும் காணலாம்.



(படம்: ச. ஞான பிரசாந்தன்)

# கெஹெலிய பெயரிலான பாடசாலையின் நாமம் அதிரடியாக மாற்றம்!

## இலங்கை ஆசிரியர் சங்கமும் ஆதரவு

- எஸ்.டொரின் -

கண்டி, வத்தேகம கல்வி வலயத்தின் குண்டசாலை பிரிவில் உள்ள 'கெஹலிய ரம்புக்வெல்ல ஆரம்பப் பாடசாலை'எனப் பெயர் பொறிக்கப்பட்ட பெயர் பலகையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பெயர் மாற்றம் செய்வதற்கு மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயகோன் அனுமதியளித்துள்ளார்.

மேலும், அந்தப் பாடசாலையை "குண்டசாலை றோயல் ஆரம்பப் பாடசாலை" எனப் பெயர் மாற்றம் செய்வதற்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கட்டமைப்புக் குழு தீர்மானித்துள்ளது.

கண்டியில் உள்ள பாடசாலைகளில் ஊழல் அரசியல்வாதிகளின் பெயர்களை நீக்குமாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட நிலையிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

1996 ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் சுற்றறிக்கையில் உயிருடன் இருக்கும் நபர்களின் பெயரைப் பாடசாலைகளுக்கு சூட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்ச்சைக்குரிய இம்யூனோகுளோபுலின் கொள்வனவு முறைகேட்டில் கெஹலிய ரம்புக்வெல்ல சம்பந்தப்பட்டிருக்கும் நிலையில், அவரது பெயரைப் பாடசாலைக்கு வைத்திருப்பது பொருத்தமற்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், மினிபே கல்வி வலயமான தெல்தெனியவிலுள்ள பாடசாலைகளின் பெயரை மாற்றுவதற்கும் மத்திய மாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

# கை, கால்களில் காயம் இருப்பின் வெள்ள நீரில் இறங்க வேண்டாம்!

## எலிக்காய்ச்சல் தொடர்பில் சுகாதார மேம்பாட்டு பணியகம் எச்சரிக்கை

- எஸ்.டொரின் -

கண்கள் சிவத்தல், காய்ச்சல், சிறுநீர் வெளியேறுவது குறைவு, கடுமையான தலைவலி மற்றும் தசை வலி போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லுமாறு சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் சமூக மருத்துவ நிபுணர் வைத்தியர் உத்பலா அமரசிங்க கூறுகிறார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எலிக்காய்ச்சல் மிகவும் ஆபத்தான நோய். எனவே காயங்களுடன் தண்ணீரில் இறங்க வேண்டாம் என்று மருத்துவர் கூறினார். எலிகளின் சிறுநீரை எல்லா இடங்களிலும், குறிப்பாக வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் தண்ணீரில் கலக்கலாம், எனவே கை, கால்களில் காயங்களுடன் தண்ணீரில் இறங்க வேண்டாம் என்று மருத்துவர் இங்கு வலியுறுத்தினார்.

# 'சங்கு' சின்னத்தைப் பயன்படுத்த எங்களுக்கு முழு உரித்து உண்டு!

## யாழ். மாவட்ட வேட்பாளர் சுரேன் குருசாமி தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)



"தமிழ் மக்கள் ஒன்றிணைந்து ஆதரவை வழங்கிய சங்கு சின்னத்தை நாங்கள் எடுத்தது நல்லதொரு விடயம். அதை நாங்கள் எடுப்பதற்கும் பாவிப்பதற்கும் எங்குக்கு அனைத்து உரிமைகளும் இருக்கின்றன."

– இவ்வாறு ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளரும் ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணியின் வேட்பாளருமான சுரேன் குருசாமி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் கூறுகையில் –

"நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பல்வேறு கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள், களமிறங்கி இருந்தாலும் தமிழ்த் தேசியத்துடன் பயணிக்கின்ற எமது கூட்டணிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கின்றது. நாம் செல்லும் இடமெல்லாம் சங்குக்கு ஆதரவு பெருகி வருகின்றது.

தமிழ்த் தேசியம் பேசி தங்கள் கட்சியைத் தென்னிலங்கையில் அடகு வைத்தவர்கள் இப்போது சங்குக்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றார்கள். அதேபோன்றே வீட்டுச் சின்னத்தையும் தூக்கி கொண்டு ஓடிப் போனவர்கள் சங்குக்குப் பெருகி வருகின்ற ஆதரவைப் பார்த்து சங்குக்க எதிராகக் கூக்குரல் இடுகின்றனர்.

ஏனெனில் ஒட்டுமொத்த மக்களும் விரும்புகின்ற அடிப்படையில் எமது கூட்டணிச் செயற்படுவதால் இந்தத் தேர்தலில் தங்களை நிராகரித்து விடுவார்கள் என்ற அச்சத்தில்தான் வெறுமனே சங்குக்கு எதிராகக் கடும் பிரசாரம் செய்கின்றனர்.

அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் எடுத்துக் கொண்ட சங்கு சின்னத்தைச் சட்ட ரீதியாக என்ன செய்ய வேண்டுமோ அந்த அடிப்படையில்தான் இப்போது எமது கூட்டணிக்கு எடுத்திருக்கின்றோம். அதுவும் பெரும்பாலானவர்களின் ஆதரவுடன் – ஒத்துழைப்புடன் – சட்ட ரீதியாகத்தான் பெற்றுள்ளோம். ஆனால், அதைக் கூட சிலர் தமது தேவைகளுக்காகப் பொய்களைக் கூறி வருகின்றனர். அதேபோலவே சில கட்சிகளும் தோல்விப் பயத்தில் பொய்ப் பிரசாரம் செய்கின்றனர்.

உண்மையில் அந்தச் சங்கு சின்னத்தை நாங்கள் எடுக்காவிட்டால் அது இன்னொருவருக்குச் சென்றிருக்கும். ஆனால், தமிழ் மக்கள் ஒன்றிணைந்து ஆதரவை வழங்கிய அந்தச் சின்னத்தை நாங்கள் எடுத்தது நல்லதொரு விடயம். அதை நாங்கள் எடுப்பதற்கும் பாவிப்பதற்கும் எங்களுக்கு அனைத்து உரிமைகளும் இருக்கின்றன.

இதேவேளை, தெற்கில் ஏற்பட்ட மாற்றம் தமிழ் மக்களுக்கான மாற்றம் அல்ல என்பதனை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியம். குறிப்பாக அநுரவின் ஆட்சி என்பது கடந்த கால ஆட்சியாளர்களின் நிலைப்பாட்டைப் போலவேதான் உள்ளது என்பதை அவர்களே வெளிப்படுத்தி வருவதை அவதானிக்க வேண்டும்.

அவர்களின் பகிரங்க அறிவிப்புக்கள் என்ன என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். அதனைவிடுத்து அந்தத் தரப்புகளோடு மட்டுமல்லாது தெற்கு கட்சிகளோடு பதவிகளுக்காகவும் சுய நலன்களுக்காகவும் நிற்பவர்களை மக்கள் அடையாளம் கண்டு தக்க பாடத்தைப் புகட்ட வேண்டும்." – என்றார்.

# இலங்கைப் பெருங்கடலை மாசுபடுத்திய 26 கப்பல்கள்

இலங்கைப் பெருங்கடலை கடந்த ஒரு வருடத்தில் 26 கப்பல்கள் மாசுபடுத்தியுள்ளன எனக் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் அரசுடன் இணைந்து செயற்கைக்கோள் தொழில்நுட்பம் மூலம் தொடங்கப்பட்ட கண்காணிப்பு திட்டத்தின் தரவுகளின் அடிப்படையில் இந்த விடயங்களை அதிகாரசபை கண்டறிந்துள்ளது.

இலங்கைப் பெருங்கடலுக்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்தியது எக்ஸ்பிரஸ் பேர்ல் மற்றும் நியூ டயமண்ட் ஆகிய கப்பல் விபத்துக்களும் கடல் மாசுபடுவதற்கு பிரதான காரணங்களாகும்.

நியூ டயமண்ட் கப்பல் 2020ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இலங்கையின் கிழக்கு கடற்கரையிலிருந்து 38 கடல் மைல் தொலைவில் தீ விபத்துக்குள்ளாகி மூழ்கியது.

அதேபோன்று 2021ஆம் ஆண்டு மே மாதம் சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட எக்ஸ்பிரஸ் பேர்ல் என்ற கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் உள்ள கடலில் தீப்பிடித்து மூழ்கியது.

இந்த கப்பல் விபத்துக்கள் காரணமாக இலங்கையின் கடல் சுற்றுச்சூழலுக்கு கடுமையான மற்றும் நீண்டகால சேதம் ஏற்பட்டுள்ளதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

கடல் சூழல் மாசுபாடு விபத்துக்கள் தொடர்பில் பிரான்ஸ் அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கை கடற்பரப்பில் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் எரிபொருள் கசிவுகளை ஆராய கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் பிரான்ஸ் நிறுவனத்தினால் மேற்படி ஆய்வு நடத்தப்பட்டது. அங்கு பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கடந்த ஓராண்டில் இலங்கைப் பெருங்கடலுக்குள் நுழைந்த 26 கப்பல்கள் கடலை மாசுபடுத்தியுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

# கொழும்பு கணபதி இந்து மகளிர் வித்தியாலய கலை விழா





**கொழும்பு 12, பண்டாரநாயக்க மாவத்தை கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலயத்தின் கலை விழா கடந்த வெள்ளிக்கிழமையன்று விமரிசையாக நடைபெற்றது.**

**இதன் போது வித்தியாலயத்தின் அதிபர் திருமதி சாந்தினி சர்மா தலைமையில் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நவராத்திரி சமய பரீட்சைகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.**

**இந்நிகழ்வில், சிறப்பு அதிதியாக ஸ்ரீ கிருஷ்ணா கோர்ப்பரேஷன் நிறுவனத்தினரும் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.**





(படங்கள்: ச. ஞான பிரசாந்தன்)

## கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவரின்

# இணைப்பாளருக்கு ஓஸியில் அரசாங்க விடுதி வசதி!

## இரண்டு வருடங்களின் பின்னர் இப்போது விடயம் அம்பலம்

**(ந.லோகதயாளன்)**

கிளிநொச்சி மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரின் இணைப்பாளருக்குப் பயன்பாட்டிற்கு என்னும் பெயரில் அரச செயலகத்தின் விடுதி இரண்டு ஆண்டுகளாக வழங்கப்பட்டமை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட வேண்டிய விடுதியே இப்படி அரசியல்வாதியான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரின் தனிப்பட்ட அலுவலரான அவரது இணைப்பாளருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செயல்பட்டு வந்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் காலத்திலேயே இந்த விடுதி இப்படிப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்புக் குழுவின் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலக சுற்று நிருபத்தில் தெளிவாக விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இப்படி ஒரு தனிப்பட்ட அலுவலருக்கு அரச விடுதி வசதி வழங்குவது குறித்துக் குறிப்பிடப்படாதபோதும் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் இந்த விடுதி வசதி சட்ட முரணாக வழங்கப்பட்டுள்ளது.

சட்ட முரணாக இந்த விடுதியினை கிளிநொச்சி மாவட்டத்தின் அப்போதைய அரச அதிபரான திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் வழங்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்த விடுதியில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உதவியாளரே தங்கியிருந்துள்ளார்.

இரண்டு ஆண்டுகளாக மாவட்டச் செயலகத்தின் விடுதியில் தங்கியிருந்தமை மட்டுமன்றி அதற்கான வாடகைக் கொடுப்பனவு, மின்சாரக் கட்டணம் எவையும் அவரால் செலுத்தப்படவும் இல்லை.

வாடகையோ அல்லது மின்சாரக் கட்டணமோ செலுத்தாமல் தங்கியிருந்த விடுதியின் இரண்டு ஆண்டுகால மின்சாரக் கட்டணம் மாவட்டச் செயலகத்தின் ஒருங்கிணைப்பு அலுவலக செலவில் இருந்து கட்டப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகம் எழுத்து மூலம் வழங்கிய தகவல் அறியும் சட்டத்தின் கீழான பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலகத்தின் அரச விடுதியை சம்பந்தப்பட்டவருக்கு வழங்க இணக்கம் தெரிவித்து 2020-11-10 அன்று அப்போதைய மாவட்ட அரச அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரனால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரின் இணைப்பாளருக்கு வழங்கப்பட்டக் கடிதத்தில் விடுதிக்கான மின்சாரக் கட்டணத்தை தங்களால் நேரடியாகச் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2020-11-10 ஆம் திகதிய இவ்வாறு மாவட்ட அரச அதிபர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளருக்கு விடுதியை வழங்குவதற்கான இணக்கக் கடிதத்தில் குறிப்பிட்டவாறான மின்சாரக் கட்டணம் அந்தக் கடித ஏற்பாட்டுக்கு மாறாக ஒருங்கிணைப்பு அலுவலக செலவில் இருந்து செலுத்தப்பட்டக் காலத்திலும் அதே அரச அதிபரே பணியில் இருந்துள்ளார்.

இவற்றின் மூலம் இந்த விடுதிக்கான வாடகை கணிப்பு மற்றும் மின்சாரக் கட்டணம் ஆகியவற்றிற்கு அரச பணம் வீணடிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

# மதுபானசாலைக்கு உரிமங்கள்

**(எஸ்.நிதர்ஷன்)**

கடந்த ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பியினரும் மதுபான சாலைகளைப் பெற்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளர் கீதநாத் காசிலிங்கம் குற்றஞ்சாட்டினார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

”கடந்த ஆட்சிக் காலத்தில் பெறப்பட்ட மதுபான சாலைகள் தொடர்பான விவரங்களை ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸ ாநாயக்க வெளியிடுவார் எனப் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

தற்போது சில வாரங்களுக்கு முன்னர் ஊடக சந்திப்பை நடத்திய அக்கட்சியின் பிரமுகர் வசந்த சமரசிங்க மதுபான சாலைகளைப் பெற்றவர்கள் மற்றும் சிபாரிசு செய்தவர்களின் விவரங்களை வெளியிடப்போகிறார் எனச் சொன்னார்.

ஆனால், மூன்று வாரங்கள் கடந்தும் இதுவரை அந்தப் பட்டியல் வெளியிடப்படவில்லை. இதன்மூலம் ஜே.வி.பியினரும் மதுபான சாலை அனுமதிப் பத்திரங்களைப் பெற்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அதனால்தானா இது தொடர்பான விடயங்களை வெழ்லியிடாமல் மறைக்கின்றார்கள்?

நான் மஹிந்த ராஜபக்ஷவுடன் 15 வருடங்களாக இணைந்து வேலை செய்கின்றேன். இதுவரை மதுபான சாலை அனுமதிப் பத்திரமோ, மதுபானப் போத்தலையோ நான் பெற்றதில்லை. எவருக்கும் பெற்றுக்கொடுத்ததும் இல்லை.” – என்றார்.



# தேசிய மக்கள் சக்தியின் சாவகச்சேரியில் கிளை திறப்பு





**(த.சுபேசன்)**

தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சிப் பிரதேசத்திற்கான அலுவலகம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை ஏ9 வீதி, சாவகச்சேரி பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமாகிய இராமலிங்கம் சந்திரசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

மேலும் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர்களும் மேள வாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் அலுவலகத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளர் கருணாநாதன் இளங்குமரன் மற்றும் முன்னாள் மருத்துவ நிர்வாக அதிகாரி எஸ்.சிறீ. பவனந்தராஜா, அதிபர் ஜெயச்சந்திர மூர்த்தி ரஜீவன், தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சி மகளிர் அணி அமைப்பாளர் வெண்ணிலா இராசலிங்கம்,ஆசிரியர் காராளசிங்கம் பிரகாஷ், மென்பொருள் பொறியாளர் உதயகுமார் கீர்த்தி ஆகிய வேட்பாளர்கள் மற்றும் பிரதேச மக்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி யாழ். இளைஞரிடம் 80 இலட்சம் ரூபா மோசடி!

## சந்தேகநபர் விளக்கமறியலில்

(எஸ்.நிதர்ஷன்)

வெளிநாட்டுக்கு அனுப்புவார் எனக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரிடம் 80 லட்சம் ரூபாவை மோசடி செய்த நபர் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞரை வெளிநாடு அனுப்பி வைப்பார் எனக் கூறி 80 லட்ச ரூபாவைப் பெற்றுக்கொண்டு, இளைஞரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்காத நிலையில், மேற்படி இளைஞர் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், பணத்தைப் பெற்றுக்கொண்டவரைக் கைது செய்து, விசாரணைகளின் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது, சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.



# யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கலந்துரையாடல்

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது. .

யாழ். பொலிஸ் நிலைய மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

நாடாளுமன்றத் தேர்தல் காலங்களில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் வன்முறைகளைத் தடுக்கும் முகமாக குழு ஒன்று அமைக்க இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் உறுப்பினர்களை உள்ளடக்கிய 51 பேர் கொண்ட குழு அமைக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவில் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ் சார்பில் 7 உறுப்பினர்களும், தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 44 உறுப்பினர்களும் என மொத்தமாக 51 உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்படவுள்ளது.



மேலும், தேர்தல் பிரசார இடங்களுக்கு அனுமதி கோரல், ஒலிபெருக்கி சாதனங்களைப் பயன்படுத்தும் கால அளவு தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் சிறீமோகன், பொலிஸ் உத்தியோகத்தர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# பாண்டவர் வாழும் பூமி

# பாண்டிருப்பில் இன்று தீ மிதிப்பு



(செ.துஜியந்தன்)

கிழக்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் பதினெட்டாம் நாளான இன்று பக்தி பரவசமூட்டும் தீமிதிப்பு வைபவம் இடம் பெற உள்ளது.

மகாபாரத இதிகாசத்துடன் தொடர்புடைய கிழக்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை பூர்வாங்க கிரியைகள், ஊர்க்காவல் பண்ணல், கடல் குளித்தல், கொடியேற்றம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

மகாபாரதப் போரை நினைவு கூரும் முகமாக தொடர்ந்து 18 நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் முக்கிய நிகழ்வுகளாக புதன்கிழமை 16 ஆம் திகதி கிருஷ்ணர், பாண்டவர்கள், திரௌபதை தேவாதிகள் சகிதம் வனவாசம் செல்லுதல், பதினேழாம் நாள் (17 ஆம் திகதி) அருச்சுனன் பாசுபதம் பெறுவதற்காக தவநிலை செல்லுதல், அரவாணை களப்பலி கொடுத்தல், பதினெட்டாம் நாள் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை தீப்பள்ளயத்தின் சிகரம் என போற்றப்படும் தீமிதிப்பு வைபவம் ஆகியன இடம்பெறுகின்றன.



மறுநாள் 19ஆம் திகதி சனிக்கிழமைகாலை பாற்பள்ளயம், தருமருக்கு முடிசூட்டுதல், தீக்குழிக்கு பால்வார்க்கும் நிகழ்வு இடம்பெற்று அன்று இரவு 7 மணிக்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் திரௌபதை அம்மன் ஆலயத்தில் இருந்து ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு அம்மன் முத்துச் சப்புறத்தில் எழுந்தருளி ஊர்வலம் செல்லும் நிகழ்வுடன் உற்சவம் இனிதே நிறைவு பெறவுள்ளது.

கிழக்கில் மட்டக்களப்பு நகருக்கு தெற்கே 40 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள கல்முனை நகருக்கு வடக்கே 2 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம். இலங்கையிலே முதன் முதலில் திரௌபதை அம்மனுக்கென ஆலயம் அமையப்பெற்றது பக்தி மணம் கமழும் பாண்டிருப்பிலேயாகும்.

இந்த ஆலயத்தின் வரலாறு மிகத் தொன்மையானதாகும். வட இந்தியாவில் இருந்து வைஷ்ணவ மதத்தை பரப்பும் நோக்கோடும், மகாபாரத இதிகாசத்தை மக்கள் மத்தியில் நடித்துக் காண்பிக்கும் நோக்கோடும் தாதன் என்னும் மாமுனியும், அவனது ஆள்களும் கடல்வழியே பிரயாணம் செய்து மட்டக்களப்பு பகுதியை வந்தடைந்தனர். பின்னர் அங்கிருந்து அந்நாளில் நாகர் முனை என அழைக்கப்பட்ட திருக்கோயிலை சென்றடைந்து, அங்கேயே தங்கியிருந்து, மகாபாரத இதிகாசக் கதையினை மக்கள் மத்தியில் போதித்து வந்தனர்.

வட இந்தியாவில் இருந்து தாதன் என்பவன் இங்கு வந்திருப்பதனை ஒற்றன் மூலம் அறிந்து கொண்டான். அப்போது மட்டக்களப்பு பகுதிக்கு சிற்றரசனாக இருந்த மாருதசேனனுடைய புத்திரன் எதிர்மன்ன சிங்கன் (கி.பி.1539–கி.பி.1583) தாதனைக்கண்டு அவனது வருகை, குலம், நோக்கம், கோத்திரம், நாடு என்பவற்றை விசாரித்திருந்தான். தாதனும் தான் வருகை தந்த நோக்கத்தை மன்னனிடம் தெரிவித்து அதற்கேற்ற உகந்த இடம் ஒன்றை தேடி வழங்குமாறு மன்னனிடம் கேட்டுக்கொண்டான். மன்னனும் தாதன் விருப்பப்படியே கடல் வழியே பிரயாணம் மேற்கொண்டபோது அருகே கடலும், ஆலவிருட்சங்களும், கொக்கட்டிமரங்களும் மேற்கே வனப்பகுதியும் காணப்பட்ட பாண்டிருப்பைக் கண்டு அங்கேயே தாம் கையோடு கொண்டு வந்திருந்த திரௌபதை, விஷ்ணு, பாண்டவர்கள் சிலைகளை வைத்து வழிபாடு நடத்தி வணங்கி வந்தான். மன்னனும் தாதனின் வழிபாட்டு முறைக்கு பூரண ஆதரவை தெரிவித்தான்.

அக்காலத்தில் திரௌபதை அம்மன் ஆலயத்தின் மகிமையை கேள்வியுற்ற கண்டி மாநகரை ஆட்சிபுரிந்த அரசனான விமலதர்ம சூரியன் (கி.பி.1594) கி.பி.1604)இல் இங்குவந்து அம்மனை தரிசித்துவிட்டு சென்றார் எனவும், இவ்வாலயத்திற்காக தங்கம், வெள்ளி போன்ற ஆபரணங்களை பரிசாக அளித்துச் சென்றுள்ளான் என கல்வெட்டுக்களில் இருந்த அறியக்கிடக்கின்றது.

பழமையம், புதுமையும், அற்புதமும் நிறைந்த ஆலயமாகக் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம் திகழ்கிறது.

## மட்டு. சிவானந்தா பாடசாலை வளாகத்தில் ரெனிஸ் ஆடுகளம் நேற்றுத் திறந்துவைப்பு





(பழுவூரான்)

சபாபதி உடையார் குடும்பத்தினர் மற்றும் கே.ஒ.வீ. குடும்பத்தினர் ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ரெனிஸ் ஆடுகளத்தை கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மகராஜ் நேற்று வியாழக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். பாடசாலை அதிபர் எம்.தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,மண்முனை வடக்குப் பிரதேச செயலாளரும்,சிவானந்தா பழைய மாணவர் சங்கத் தலைவருமான வீ.வாசுதேவன்,சபாபதி உடையார் குடும்பத்தினர் மற்றும் கே.ஒ.வீ. குடும்பத்தினர்,மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.பகீரதன்,பாடசாலை ஆசிரியர்கள்,மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சுமார் 24 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ரெனிஸ் ஆடுகளம் திறந்து வைக்கப்பட்டதோடு, அதிதிகளால் இதன் ஞாபகார்த்தமாக பயன்தரு மரக்கன்றுகளும் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்புச் செயலகத்தில் வேட்பாளர்களுக்கு தெளிவூட்டல்



(ஏ.எச்.ஏ. ஹஸைன்)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கான தெளிவூட்டல் செயலமர்வு மட்டக்களப்பு மாவட்டச் செயலாளரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான ஜ/லேகா ஜஸ்டினா தலைமையில் பழைய மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

தேர்தல்கள் உதவி ஆணையாளர் எம்.எ.எம்.சுபியானின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இடம் பெற்ற இந்நிகழ்வின்போது அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தேர்தல் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டி விடயங்கள் தொடர்பாகவும், தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் தெளிவூட்டப்பட்டது.

## மார்பகப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு நடைபவனி!

(றியாஸ் ஆதம்)




உலக மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தினையொட்டி சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனியும், அது தொடர்பான கருத்தரங்கும் கடந்த புதன்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஐ.எம்.கபீர் தலைமையில் இடம்பெற்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸ டீனின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷ ாத் உள்ளிட்ட வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், கல்வி மற்றும் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் முன்னால் ஆரம்பமான விழிப்புணர்வு நடைபவனி அம்பாறை – கல்முனை பிரதான வீதியூடாக ஹிஜ்றா சந்தியினை அடைந்து, அங்கிருந்து தியேட்டர் வீதியூடாக வைத்தியசாலை வீதியை அடைந்து, அங்கிருந்து சுகாதார வைத்தி அதிகாரி அலுவலகத்தை சென்றடைந்தது. இதில் கலந்துகொண்டவர்கள் மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு பதாகைகளை தாங்கியவாறு சென்றமையுடன் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தனர்.

அதனைத் தொடர்ந்து சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கும் இடம்பெற்றது. இதன்போது டொக்டர் எம்.ஏ.ம்.ஹில்மி மார்பக புற்று நோயைக் கண்டறிந்து சிகிச்சை பெறுதல் தொடர்பாகவும், புற்றுநோயில் இருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பாகவும் விரிவுரை நிகழ்த்தினார்.

## இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் பயிற்சி பாசறை மட்டக்களப்பு நகரில்

( ஏறாவூர் நிருபர் )



மட்டக்களப்பில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் கிழக்கு மாகாணத்திற்காக பயிற்சி பாசறை காணி நிருவாகத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் நவருபரஞ்சினி தலைமையில் இடம் பெற்றது.

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பதிகாரி ஏ.எம். அமீன் ஏற்பாட்டில் வட கிழக்கு மாகாண சிரேஷ்ட இணைப்பு அதிகாரி பி. பிரதீபன் பங்கு பற்றுதலுடன் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வுதிய திட்டத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான நுட்பங்களையும் உபாய நெறிமுறைகளையும் பற்றி உத்தியோகத்தர்களுக்கு தெளிவு வழங்கப்பட்டது.

அரசாங்க ஓய்வூதியம் பெறாதவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்களை வழங்குவதே இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் பணியாகும். அரசாங்கத்தினால் மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும் தேவையான ஆலோசனை மற்றும் வழி காட்டுதல்கள் இதன்போது துறைசார் நிபுணர்களினால் வழங்கப்பட்டன.

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை 1996ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க திருத்தச் சட்டம் மற்றும் 1999ஆம் ஆண்டின் 33ஆம் இலக்கத்தின் மூலம் நிறுவப்பட்ட செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட இணைப்பதிகாரி எஸ்.ரீ. சுதாகரன், உட்பட கிழக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இன்னும் பல அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

# கொள்கை அரசியலையே முன்னெடுத்த சந்திரசேகரனின் மகளான நான் கோடிகளுக்கு ஒருபோதும் விலைபோகேன்

## உறுதியுரைக்கின்றார் அனுஷா சந்திரசேகரன்

(க.கிஷாந்தன்)

"இலங்கையில் கொள்கை அரசியலை முன்னெடுத்த பெருந்தலைவர் அமரர் சந்திரசேகரனின் மகள்தான் நான். மாறாக கோடிகளுக்கு விலைபோகும் நபர் கிடையாது. கோடிகளை வாங்கிய அரசியல்வாதிகளே, இன்று கோடிகளைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றனர்." என்று ஐக்கிய ஜனநாயக குரல் கட்சியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

தலவாக்கலையிலுள்ள தேர்தல் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

" 2020 பொதுத்தேர்தலில் நான் சுயேச்சையாக களமிறங்கி இருந்தேன். அப்போதுகூட முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் 20 கோடி ரூபா பணம் வாங்கிவிட்டே தேர்தலில் போட்டியிட்டேன் என எதிரணித் தரப்பில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, வாக்குகளை சிதறடிப்பதற்காகவே நான் களமிறக்கப்பட்டுள்ளேன் என்றெல்லாம்கூட தகவல்கள் பரப்பட்டன. ஆனால் இவை எதுவும் உண்மை அல்ல. எனது தந்தையின் நண்பர்களின் உதவியுடன்தான் பொதுத்தேர்தலை எதிர்கொண்டேன்.

தேர்தலில் மக்கள் எனக்கு ஆதரவு வழங்கி இருந்தனர். எனினும், நாடாளுமன்றத்துக்கு தெரிவாகக்கூடிய வாக்குகளை நோக்கி நகரமுடியவில்லை. இவ்வாறு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறாததால் அரசியல் ரீதியில் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டேன். எனக்காக வேலை செய்த தொண்டர்களைக்கூட பழிவாங்கினார்கள். இதற்கு எதிராக குரல் எழுப்பினேன். அவ்வாறு குரல் எழுப்பும்வேளைகளில் பழிவாங்கல்கள் அதிகரித்தன. அதன்பின்னர் அமைதி காத்தேன். அடக்குமுறைகள் குறைந்தன. எனவே, அரசியலில் அமைதியும் தேவையெனக் கருதி அமைதி காத்தேன்.

நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்காத நான் ஐந்து வருடங்கள் எங்கே சென்றேன் எனக் கேட்கின்றனர். ஆனால் நாடாளுமன்றம் சென்ற எமது மலையக பிரதிநிதிகள் என்ன செய்தனர்? தொலைக்காட்சி விவாதங்களில் கூட அடித்துக்கொள்ளும் நிலைமை அல்லவா காணப்பட்டது?

பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து களமிறங்க வேண்டும் என்பதே எனது எண்ணமாக இருந்தது. எனினும், அதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. அதன்பின்னர் சுயேச்சையாக போட்டியிட திட்டமிட்டிருந்தேன். அவ்வேளையிலேயே தலைவர் ரஞ்சன் ராமநாயக்க என்னை அழைத்து கதைத்தார். ஊழல் அற்ற அரசியலை செய்வதற்காக புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ளனர் எனஜ் கூறினார். அதில் போட்டியிடுமாறு கேட்டுக்கொண்டார். ஐக்கிய ஜனநாயகக் குரல் என்ற அந்த கட்சியின் கொள்கை பிடித்திருந்தது . அதனால்தான் அக்கட்சி ஊடாகக் களமிறங்கியுள்ளேன்.

2020 இல் பஸில் ராஜபக்ஷவிடம் பணம் வாங்கினேன் எனக் கூறினார்கள். அது உண்மையெனில் தேர்தலின் பின்னர் நான் ஆளுங்கட்சியுடன் பதவிகளை பெற்று அல்லவா இருந்திருக்க வேண்டும்? அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. கடந்த முறை 20 கோடி ரூபா என்றவர்கள் இம்முறை 15 கோடி ரூபா என்கிறார்கள். இது பொய். கோடிகளுக்கு விலைபோகும் நபர் நான் கிடையாது. எனது தந்தை அமரர் சந்திரசேகரனின் வழியிலேயே நான் பயணிக்கின்றேன். கொள்கை அரசியலை முன்னெடுத்த தலைவரின் மகள் நான். எனவே, கோடிகளுக்கு விலைபோனவர்கள்தான் இன்று கோடிகளைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றனர்.

மலையக மக்களுக்கு நான் எதுவும் செய்யவில்லை என என்னை பற்றி அறியாத சிலரே விமர்சிக்கின்றனர்.



திரைமறைவில் பல நலன்புரி திட்டங்களை முன்னெடுத்துவருகின்றேன். அவற்றை வெளிப்படுத்த விரும்பவில்லை. இதற்கு நலன்விரும்பிகளும் உதவிகளை வழங்கிவருகின்றனர்.

மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை நிச்சயம் மாற்றம் வரும். பழைய அரசியல்வாதிகளை நம்பி ஏமாந்தத. போதும். இளைஞர்கள், புதியவர்கள் வரவேண்டும் என மக்கள் கருதுகின்றனர். எனவே, மக்களுக்காக குரல் கொடுக்கும் என்னை அவர்கள் சபைக்கு அனுப்பி வைப்பார்கள். நாடாளுமன்ற தேர்தலில் நிச்சயம் வெற்றிபெறுவேன்." என்றார்.

# ஒல்லாந்தர் காலத்து நாணயத்தை விற்கக் கொண்டு வந்த நபர் கைது

## ஹட்டனில் நேற்றுச் சம்பவம்

(க.கிஷாந்தன்)

ஒல்லாந்தர் காலத்து VOC எழுத்து பொறிக்கப்பட்ட கேடயம் மற்றும் இரண்டு நாணயங்களை விற்பனை செய்ய வந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

20 லட்சம் ரூபாவுக்கு ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்த கேடயம் மற்றும் இரண்டு நாணயங்களை விற்பனை செய்ய வந்த நபரை ஹட்டன் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

கினிகத்தேனை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய சந்தேக நபர், ஹட்டன் பிரதேசத்தில் உள்ள ஒருவருக்கு இவற்றை விற்பனை செய்ய வந்துள்ளார்.





சந்தேகநபருக்கு கேடயம் மற்றும் இரண்டு நாணயங்கள் எவ்வாறு கிடைத்தன என்பது குறித்து சந்தேகநபர் எதுவும் கூறவில்லை எனவும், தொல்பொருள் திணைக்களத்திற்கு இது குறித்துத் தெரிவிக்கப்பட்டதோடு, தொல்பொருள் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக தொல்பொருள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அட்டன் தலைமை பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று அட்டன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவிருந்தார்.

VOC என்பது ஒல்லாந்தர் கால "கிழக்கிந்திய கம்பனி" எனும் பெயரைக் குறிக்கும் சுருக்கக் குறியீடாகும். இந் நாணயம் 1732 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது.

# நுவரெலியா பஸ் நிலையத்தில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு

(செ.திவாகரன் - நானுஓயா)

நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்தில் இருந்து அடையாளம் தெரியாத பெண்ணின் சடலம் ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் நிலையத்தினுள் தரையில் ஒருவர் இறந்து கிடக்கின்றார் என நுவரெலியா மாநகர சபை ஊழியர் ஒருவர் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபரும் அவருடன் இன்னுமொரு பெண்ணும் கடந்த 5 நாள்களுக்கு முன்பிலிருந்து நுவரெலியா பஸ் தரிப்பிடத்தில் யாசகம் பெற்று வந்தனர் எனத் தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் அதிக குளிர் காரணமாக இவர் உயிரிழந்திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தேசிய மக்கள் சக்தி கட்சியினரின் கலந்துரையாடல் நுவரெலியாவில்

(செ.திவாகரன் - நானுஓயா)

தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கலந்துரையாடலொன்று

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நுவரெலியா பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் புதிய வேட்பாளர்களை அறிமுகப்படுத்துதல், ஆட்சி, அதிகார நிலைவரம் தொடர்பாகவும் எதிர்கால செயற்பாடுகள் பற்றியும், முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கு அனைவரும் எவ்வாறு இணைந்து செயற்படலாம் என்பன பற்றியும் கலந்துரையாடல் செய்தனர்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுக்கு ஏன் வாக்களிக்க வேண்டுமென வருகை தந்த பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.





ஜஸ்டின் ட்ரூடோ குற்றச்சாட்டு



# கனடாவின் இறையாண்மையை இந்தியா மீறிவிட்டது

கனடாவின் இறையாண்மையை இந்தியா மீறிவிட்டதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ குற்றம் சுமத்தியுள்ளார்.

செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இங்கு ஜஸ்டின் ட்ருடோ மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"ஹர்தீப் சிங் நிஜ்ஜர் கொலையில் இந்திய புலனாய்வாளர்களின் தொடர்பு குறித்து புலனாய்வுத் தகவலின் அடிப்படையில்தான் குற்றச்சாட்டை

முன்வைத்தேன். அண்மையில் நடந்த ஜி 20 உச்சி மாநாட்டிலும் இது குறித்து கேள்வி எழுப்பி இருப்பேன்.

நிஜ்ஜர் கொலை வழக்கு விசாரணையில் இந்தியாவின் ஒத்துழைப்பை எதிர்பார்த்தோம்.

இணைந்து பணியாற்றி ஆதாரத்தை கண்டறியலாம் என தெரிவித்தோம். இதற்கு இந்தியா முன்வரவில்லை.

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு எதிரான கருத்துடைய கனடா



நாட்டவர்கள் குறித்து இந்திய தூதரக அதிகாரிகள் தகவல் சேகரித்துள்ளனர்.இது கனடா நாட்டவர்களுக்கு எதிரான வன்முறைக்கு வழிவகுக்கும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜுன் மாதம் 18 ஆம் திகதி கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜர் சுட்டுக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவரது கொலைக்குப்பின்னால் இந்தியாவின் சதி இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ குற்றம் சுமத்தி வருகின்றார்.

இந்த குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ள போதிலும் ட்ருடோ தொடர்ந்தும் குற்றச்சாட்டை முன்வைப்பதால் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

ஹர்தீப் சிங் நிஜ்ஜர் கொலை வழக்கு விசாரணையில் இந்திய அரசு போதுமான ஒத்துழைப்பை வழங்காமையால் கனடாவிலிருந்து இந்திய தூதரக அதிகாரிகளை

வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து இதற்கு பதிலடியாக, கனடா தூதர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதிக்குள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்று இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

# இந்தியா - மொரிடேனியா இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு முன்னிலையில் இந்தியா-மொரிடேனியா இடையே பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

திரவுபதி முர்மு, ஆப்பிரிக்க நாடுகளுக்கு முதன்முறையாக உத்தியோகப்பூர்வ விஜயம்



மேற்கொண்டுள்ளார். இதன்படி அல்ஜீரியா, மொரிடேனியா மற்றும் மலாவி ஆகிய 03 நாடுகளில் அவர் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

இந்த பயணத்தின் முதற் கட்டமாக கடந்த 13 ஆம் திகதி அல்ஜீரியா நாட்டின் அல்ஜீர்ஸ் நகருக்கு சென்றடைந்த ஜனாதிபதி முர்முவை அந்நாட்டு ஜனாதிபதி அப்தில் மஜித் திபவுன் மற்றும் அவருடைய மந்திரி சபை உறுப்பினர்கள் வரவேற்றனர்.

அந்நாட்டுக்கு பயணம் மேற்கொண்ட முதல் இந்திய ஜனாதிபதி என்ற பெருமையை முர்மு பெற்றுள்ளார்.

அங்கு நடைபெற்ற அல்ஜீரியா-இந்தியா பொருளாதார மாநாட்டில் கலந்துக் கொண்ட திரவுபதி முர்மு இந்திய அரசின் "மேக் இன் இந்தியா" மற்றும் "மேக் பார் வேர்ல்டு" திட்டங்களில் இணையுமாறு அல்ஜீரிய நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

தனது சுற்றுப்பயணத்தின் இரண்டாவது கட்டமாக மொரிடேனியா நாட்டிற்கு சென்ற அவர் தலைநகர் நாக்சாட்டில் இந்திய சமூகத்தினருடனும் கலந்துரையாடினார்.

இதனை தொடர்ந்து இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு மற்றும் மொரிடேனியா ஜனாதிபதி முகமது ஆல்ட் கசோனி ஆகியோர் முன்னிலையில் இருநாடுகளுக்கு இடையே பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

2024 ஆம் ஆண்டு முதல் 2028 ஆம் ஆண்டு வரையிலான இந்திய கலாசார பரிமாற்ற திட்டம், விசா இல்லாத அரசுமுறை, உத்தியோகப்பூரவ பயணங்களுக்கான ஒப்பந்தம் உள்ளிட்டவை கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இந்த ஒப்பந்தங்கள் மூலம் இருநாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது




## மராட்டிய மாநில சட்டசபை தேர்தல்:

# வேட்பாளர்கள் பட்டியலை ஒரு வாரத்தில் வெளியிட பா.ஜ.க. திட்டம்

இந்தியாவில் மராட்டிய மாநில சட்டசபை தேர்தலில் பா.ஜ.க.வின் ஜே.பி. நட்டா மற்றும் மத்திய அமைச்சர் அமித்ஷா ஆகியோர் கூட்டணி கட்சி தலைவர்களுடன் தொகுதி பங்கீடு பற்றி கலந்துரையாடியதன் பின்னர் ஒரு வாரத்திற்குள் வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

288 உறுப்பினர்களைக் கொண்ட மராட்டிய சட்டசபைக்கு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தப்பட்டு

வாக்கு எண்ணும் பணிகள் 23 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதுடில்லியில் உள்ள பா.ஜ.க. தலைமையகத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அந்த கட்சியின் மத்திய தேர்தல் குழு கூட்டத்தில் , பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி. நட்டா, மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா மற்றும் மூத்த தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

100 இடங்களில் போட்டியிடுவது பற்றி ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. மகாயுதி கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பற்றிய கலந்துரையாடலின் பின்னர் , மீதமுள்ள இடங்களுக்கான வேட்பாளர்களை அந்த கட்சி தீர்மானிக்கும்.

இந்த கூட்டணி, பா.ஜ.க., அஜித் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சி மற்றும் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா ஆகிய கட்சிகளை உள்ளடக்கியுள்ளது.

150 இற்கும் கூடுதலான இடங்களில் பா.ஜ.க. போட்டியிட கூடும் என்றும் சிவசேனா 80 முதல் 85 இடங்களிலும் மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சி 40 முதல் 45 இடங்களிலும் போட்டியிட கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# இந்திய உச்ச நீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதி யார்?

## சஞ்சீவ் கண்ணாவை நியமிக்க பரிந்துரை

இந்திய உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கண்ணாவை நியமிக்க தற்போதைய தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திர சூட் பரிந்துரைத்துள்ளார்.

மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்திற்கு இது தொடர்பாக அவர் கடிதம் எழுதியுள்ளார்.

மரபுப்படி தலைமை நீதிபதிக்கு அடுத்த பொறுப்பிலுள்ள மூத்த நீதிபதி சஞ்சீவ் கண்ணா.

கடந்த 14 வருடங்கள் பல்வேறு உயர் நீதிமன்றங்களில் நீதிபதியாக பணியாற்றியிருக்கிறார்.

இந்த பரிந்துரையை அரசு ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், உச்ச நீதிமன்றத்தின் 51 ஆவது நீதிபதியாக சஞ்சீவ் கண்ணா பொறுப்பேற்பார்.

நவம்பர் மாதம் 10 ஆம் திகதியுடன் நீதிபதி டி.ஒய். சந்திரசூட் ஓய்வு பெறுகிறார்.



# நைஜீரியாவில் சோகம்

## பெற்றோல் லொறி வெடித்து 147 பேர் உயிரிழப்பு

மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவில் பெற்றோல் லொறி வெடித்து ஏற்பட்ட விபத்தில் 147 உயிரிழந்தனர்.

பெற்றோலை ஏற்றிக் கொண்டு கானோ மாகாணத்திலிருந்து ஜிகாவா மாகாணத்தின் மாஜியா நகர நெடுஞ்சாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு சென்று கொண்டிருந்த லொறி விபத்துக்குள்ளாகியதிலேயே இவ்வாறு 147 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுமார் 110 கி.மீ. தொலைவுக்கு மேல் அந்த வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநர் அதன் கட்டுப்பாட்டை இழந்ததால் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தைத் தொடர்ந்து லொறியிலிருந்து கசிந்த பெற்றோலை சேகரிப்பதற்காக அந்தப் பகுதியில் ஏராளமான பொதுமக்கள் குவிந்தனர். அப்போது அந்த பெற்றோல் லொறி திடீரென வெடித்துச் சிதறி, மிகப் பெரிய தீப்பிழம்பு ஏற்பட்டது.

இதில் 97 பேர் சம்பவ இடத்திலேயே எரிந்து சாம்பலாகினர். பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் மேலும் 50 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

பெற்றோல் லொறி வெடித்து தீ அதிவேகமாக பரவியதால் அங்கிருந்தவர்களால் உடனடியாக தப்பிச் செல்ல முடியவில்லை. எனவே, இந்த விபத்தில் ஏராளமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பலரது உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் விபத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஆப்பிரிக்காவிலேயே மிக அதிக மக்கள் தொகையைக் கொண்ட நைஜீரியாவில், வீதி விதிகள் சரியாக பின்பற்றப்படாததால் வீதி விபத்துகள் அடிக்கடி ஏற்படுகின்றன.

அதிலும், இதுபோன்ற விபத்துகளுக்குப் பிறகு பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக வந்து வாளிகளில் எரிபொருளைச் சேகரிக்கும் வழக்கமும் அதிகமாகிவருகிறது. பெற்றோல், டீசலுக்கு அளித்து வந்த மானியத்தை அரசு விலக்கிக் கொண்டதால் அவற்றில் விலைகள் கடந்த ஓராண்டில் மட்டும் மும்மடங்காகியுள்ளன.

இதன் காரணமாக, லொறி விபத்துகளைப் பயன்படுத்தி எரிபொருளை சேகரிப்பதில் மக்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இந்தச் சூழலில், மாஜியா நகரில் தற்போது ஏற்பட்டுள்ள பெற்றோல் லொறி வெடி விபத்து நாடு முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

### போர்ப் பயிற்சிகளை

# தாக்குதல்களாக மாற்ற சீனா திட்டம்

### தாய்வான் குற்றச்சாட்டு

போர்ப் பயிற்சிகளை உண்மையான தாக்குதல்களாக மாற்ற சீனா திட்டமிட்டு

அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தாய்வான் குற்றம் சுமத்தியுள்ளது.

போர்ப் பயிற்சியின்போது சீனா இரண்டு ஏவுகணைகளை ஏவியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதியன்று தாய்வானைச் சுற்றி சீனா போர்ப் பயிற்சியை நடத்தியது.

தாய்வானை தமது எல்லைக்குட்பட்ட பகுதியாக சீனா கருதும் நிலையில் தாய்வான் அதனை மறுத்துள்ளதுடன் தனியொரு நாடாகவே பார்க்கிறது.

பிரிவினைவாத நடவடிக்கைகளில் தாய்வான் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டிவரும் சீனா,

அதற்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் போர்ப் பயிற்சிகளை நடத்திவருதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் நடைபெற்ற போர்ப் பயிற்சியில் 153 சீனப் போர் விமானங்கள் ஈடுபட்டதாகத் தாய்வான் தெரிவித்தது.

தாய்வானுக்கு அருகில் சீனக் கடற்படை மற்றும் கடலோரக் காவற்படைக்குச் சொந்தமான 25 படகுகள் சென்றதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் சீனாவுக்கு கண்டனம் தெரிவித்துள்ள தாய்வான், ஜனநாயகத்தையும் இறையாண்மையையும் உறுதி செய்ய தேவையான படைகளை அனுப்பியிருப்பதாக கூறியுள்ளது.





# லெபனான் நகராட்சி அலுவலகத்தில் இஸ்ரேல் தாக்குதல் :மேயர் உயிரிழப்பு

லெபனானின் தெற்குப் பகுதியில் உள்ள நபாடியே நகராட்சி அலுவலகத்தில் இஸ்ரேல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடத்திய வான்வழித் தாக்குதலில் நகர மேயர் உள்பட பலர் உயிரிழந்தனர்.

இஸ்ரேலின் குண்டுவீச்சால் ஏற்படும் பாதிப்புகளின்போது மேற்கொள்ள வேண்டிய மீட்புப் பணிகள் குறித்து தனது அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது குறித்து இஸ்ரேல் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹிஸ்புல்லாக்களை குறிவைத்து அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, லெபனானில் இஸ்ரேல் தினமும் தாக்குதல் நடத்துவதில் தங்களுக்கு உடன்பாடு இல்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. அதையும் மீறி லெபனானின் பல்வேறு பகுதிகளில் தனது வான் வழித் தாக்குதலை இஸ்ரேல் நடத்தி வருகிறது.

# இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்ய தடை

### இத்தாலி அறிவிப்பு



இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு இராணுவ தளவாடங்கள் ஏற்றுமதி செய்வதற்கான அனைத்து புதிய உரிமங்களுக்கும் இரத்து செய்யப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்கும் முக்கிய நாடுகளில் ஒன்றாக இத்தாலி காணப்படும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கடந்த வருடம் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டதையடுத்து ஒரு வருடத்திற்கும் மேலாக போர் இடம்பெற்று வருகிறது.

இஸ்ரேல் – ஹமாஸ் மோதலால் இதுவரை 40,000 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதுடன் காயமடைந்தவர்களின்

எண்ணிக்கை ஒரு லட்சத்தை அண்மித்தது.

ஹமாஸ் அமைப்பினரை அழிக்கும் வரை போரிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்றும் இஸ்ரேல் பிரமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா உள்ளிட்ட நட்பு நாடுகளின் ஆதரவுடன் இஸ்ரேல் இராணுவம் போரில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிபா தகுதிகாண் போட்டி

## ஆஸிக்கு கோலடித்த இலங்கைத் தமிழன்

எதிர்வரும் 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பிபா உலகக் கிண்ண கால்பந்துத் தொடரில் பங்கேற்கும் அணிகளை தெரிவு செய்வதற்காக இடம்பெற்று வருகின்ற ஆசிய வலயத்துக்கான தகுதிகாண் சுற்றில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட நிஷான் வேலுப்பிள்ளை அவுஸ்திரேலிய தேசிய கால்பந்து அணியை பிரதிநிதித்துவம்





செய்து பங்கேற்ற முதல் போட்டியிலேயே கோலினை உட்செலுத்தி அணியின் வெற்றிக்கு துணைநின்றதுடன் அணியில் நிரந்தர இடத்தனையும் தக்கவைத்துள்ளார்.

உலகம் எதிரபார்த்துக் காத்திருக்கும் 2026ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கால்பந்து தொடருக்கான தககுதிகாண் சுற்றுப் போட்டிகள் உலகின் பல்வேறு நாடுகளில் இடம்பெற்று வருகின்றன.

அதற்கமைய அவுஸ்திரேலிய அணி பங்கேற்ற சில போட்டிகளில் தொடர்ந்து பின்னடைவை வந்த நிலையில், அணியின் முகாமையாளராக புதிதாக பொறுப்பேற்ற டோனி போபாவிக் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சீனாவுக்கு எதிரான போட்டியில் இலங்கையை வம்சாவளியாகக் கொண்ட நிஷான் வேலுப்பிள்ளையை அணிக்குள் இணைத்துக்கொண்டார்.

அவுஸ்திரேலிய அணிக்காக மாற்று வீரராக போட்டியின் 83ஆவது நிமிடத்தில் களம் நுழைந்த நிஷான், அடுத்த 7 நிமிடத்தில் தனது அறிமுக போட்டியில் முதல் சர்வதேச கோலை அடித்து அணியின் வெற்றிக்கு முக்கிய பங்களித்தார். இதன்மூலம் குறித்த போட்டியில் அவுஸ்திரேலிய அணி 3 க்கு 1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றியீட்டி உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பையும் அதிகரித்துக் கொண்டது.



## பாலியல் வழக்கு : பகிரங்கமாக மன்னிப்பு கோரிய கால்பந்து நட்சத்திரம்!

தென் கொரிய கால்பந்து வீரர் ஹ்வாங் உய்ஜோ (Hwang Uijo) தனது நண்பர்களுடனான இரகசியமாக பாலியல் சந்திப்புகளை பதிவு செய்ததற்காக பகிரங்கமாக மன்னிப்புக் கோரியுள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஜுன் மற்றும் செப்ரெம்பர் மாதங்களுக்கு இடையில் நான்கு சந்தர்ப்பங்களில் 31 வயதான ஸ்ட்ரைக்கர், தனது இரண்டு நண்பர்களுடனான நெருக்கமான தருணங்களை அவர்களின் அனுமதியின்றி படம்பிடித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

கொரியா டைம்ஸ் செய்திச் சேவையின்படி, கால்பந்தாட்ட வீரருக்கு நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்குமாறு வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை (16) சியோலில் முதன்முறையாக நீதிமன்றத்தில் ஆஜரானபோது, நடந்த சம்பவத்துக்கு ஹ்வாங் வருத்தம் தெரிவித்ததுடன், எதிர்காலத்தில் நான் எந்தத் தவறும் செய்ய மாட்டேன், ஒரு கால்பந்து வீரராக என்னால் முடிந்ததைச் விளையாட்டில் செய்வேன் என்று கூறியுள்ளார்.

## சொந்த மண்ணில் இந்தியா மோசமான சாதனை : 46 ஓட்டங்களுக்குள் சுருண்டது!



-கனுஷியா புஷ்பகுமார்-

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்தியா 46 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது, சொந்த மண்ணில் மோசமான சாதனையை பதிவு செய்தது.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் சொந்த மண்ணில் இந்தியா குறைந்த ஓட்டங்களுக்குள் தோல்வியடைந்தமை இது முதற் தடவை என்பதுடன், டெஸ்ட் அரங்கில் இது அவர்களின் மூன்றாவது குறைந்தபட்ட ஓட்ட எண்ணிக்கையாகும்.

2020ஆம் ஆண்டில் அடிலெய்ட்டில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் 36 ஓட்டங்களுக்கும், 1974ஆம் ஆண்டில் லோர்ட்டிஸில் இங்கிலாந்துக்கு எதிராக 42 ஓட்டங்களையும் பெற்றமையே இந்தியாவின் முன்னைய மோசமான ஓட்ட எண்ணிக்கை ஆகும்.

பெங்களூரில் நடந்த மூன்று போட்டிகள் கொண்ட முதல் டெஸ்ட்டின் முதல் இன்னிங்ஸில் நியூஸலாந்து அணியின் மாட் ஹென்றி 5 விக்கெட்டுகளையும், வில்லியம் ஓரூர்கே 4 விக்கெட்டுகளையும் அதிகபடியாக கைப்பற்றினர்.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பில் ரிஷப் பண்ட் (20) மற்றும் யஷஸ்வி ஜெய்ஸ்வால் (13) தவிர எவரும் இரட்டை இலக்க ஓட்டங்களை பெற்றுக்கொள்ளவில்லை.

விராட் கோஹ்லி, சர்பராஸ் கான், கே.எல்.ராகுல், ரவீச்சந்திரன் அஸ்வின் மற்றும் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் டக்கவுட்டில் ஆட்டமிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.



## பிரபல குத்துச்சண்டை வீரர் வில்லியம்ஸ் ஓய்வு!



வேல்ஸ் குத்துச்சண்டை வீரர் லியாம் வில்லியம்ஸ் (Liam Williams) தனது மூளையதிர்ச்சி நோய் காரணமாக விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

32 வயதான லியாம் வில்லியம்ஸ் உலக சம்பியன் பட்டத்தை வெல்லாத போதிலும் சிறந்த வேல்ஸ் வீரர்களில் ஒருவராக கருதப்படுகிறார்.

எனினும், பிரிட்டிஷ், ஐரோப்பிய மற்றும் கமன்வெல்த் பட்டங்களை வென்றுள்ள அவர், போட்டிகளின் போது தலையில் அடிகளை வாங்கியமையால் மூளைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் புகழ்பெற்ற குத்துச்சண்டையிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

ஓய்வு குறித்து கருத்து வெளியிட்டுள்ள வில்லியம்ஸ், ”பிரிட்டிஷ் வீரர் கிறிஸ் யூபாங்க் உடனான போட்டியின் பின்னர் தான் மூளையதிர்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்ததாகவும், எனினும், அந்த தகவலை வெளியிட்டு தனது ரசிகர்களை கவலையில் ஆழ்த்த விரும்பவில்லை.” எனக் கூறியுள்ளார்.

வில்லியம்ஸ் 18 மாதங்களில் நான்கு மூளையதிர்ச்சிகளைச் சந்தித்ததாகவும் தெரிவித்துள்ளதுடன், எதிர்காலத்தில் குத்துச்சண்டை பயிற்சியாளராக பணியாற்றுவது குறித்து தற்போது சிந்தித்து வருவதாகவும் அறிவித்துள்ளார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு 08 கலாநிதி என்.எம்.பெபீரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள ''அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்'' நிறுவனத்தினரால் 2024 அக்டோபர் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.